# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 29 வியாழக்கிழமை (14-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:223


## யுத்த நிறுத்தம் குறித்து ஆராய்வதற்கு பாதுகாப்பு அமைச்சில் இன்று மாநாடு!

கொழும்பு,செப்.14

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது யாழ். மாவட்டத்தில் யுத்த நிறுத்தம் மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்காக உயர்மட்ட மாநாடு ஒன்று இன்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் சுமுகமான தேர்தலை நடத்த வசதியாக யுத்த நிறுத்தம் மேற்கொள்ளுமாறு அரசைக் கோருமாறு தமிழ்க் கட்சிகள் தேர்தல் ஆணையாளருடன் நடந்த சந்திப்பில் கேட்டிருந்தன.

இதைத் தொடர்ந்து இது விடயமாக ஆராய்ந்து முடிவு செய்வதற்காக பாதுகாப்பு அமைச்சில் இன்று இடம்பெறும் மாநாட்டில் பாதுகாப்புத்துறை சார்ந்த அதிகாரிகளும், தேர்தல் ஆணையாளரும் கலந்து கொள்கின்றனர்.

இது தொடர்பாக எடுக்கப்படும் முடிவை தேர்தல் ஆணையாளர் எதிர்வரும் செவ்வாயன்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடத்தும் சந்திப்பில் தெரிவிப்பார் எனத் எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

## வேட்பாளரின் விலகல் கடிதத்தை ஏற்க மட்டக்களப்பு அரச அதிபர் மறுப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளராகப் போட்டியிடும் எஸ்.பிரசாந்த் சமர்ப்பித்த விலகல் கடிதத்தை ஏற்க மட்டக்களப்பு அரச அதிபர் மௌனகுருசாமி மறுத்துவிட்டார்.

மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி அதிபரும், வேட்பாளருமான எஸ்.பிரசாந்த் தாம் தேர்தலிலிருந்து விலகுவதாகத் தெரிவித்துக் கடிதம் ஒன்றைத் தெரிவத்தாட்சி அதிகாரியான அரச அதிபருக்கு நேற்று அனுப்பினார்.

இது தொடர்பாக எமது மட்டக்களப்பு செய்தியாளர் அவரிடம் கேட்ட போது, "வேட்பாளர் ஒருவர் இறந்தால் மட்டுமே அவரது பெயர் வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்கப்படும். வேட்புமனு ஏற்கப்பட்ட பின்னர் எவர் ராஜினாமாச் செய்தாலும் அவரது பெயர் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கும். இதன் காரணமாக நேற்றுச் சமர்ப்பித்த விலகல் கடிதத்தை நிராகரித்துவிட்டேன்" என்றார். (இ-3-21)

## சரித்திரத்தில் முதற் தடவை

# கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் இன்று முற்பகல் கூடுகிறது

### அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை நிறைவேற்றுவதற்காக

கொழும்பு,செப்ரெம்பர் 14

**கடந்த ஓகஸ்ட் மாதம் கலைக்கப்பட்ட இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றம், இன்று வியாழக்கிழமை மீண்டும் கூடுகிறது.**

**அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை நிறைவேற்றுவதற்காக, தமக்குள்ள அரசமைப்புச் சட்ட அதிகாரத்தைக் கொண்டு ஜனாதிபதி விடுத்த பிரகடனத்துக்கு அமையவே நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது.**

இலங்கையின் நாடாளுமன்ற சரித்திரத்தில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் (தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர்) மீண்டும் கூடுவது இதுவே முதற் தடவை ஆகும்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் கூடும் என்று அதன் செயலாளர் நாயகம் டம்பிகா கித்துல்கொட சகல முன்னாள் எம்.பிக்களுக்கும் அறிவித்துள்ளார்.

இன்றைய அமர்வு மூன்று மணித்தியாலங்களுக்கு இடம் பெறும். அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை குறித்த விவாதம் மட்டுமே நடைபெறும். வேறு அலுவல்கள் எதுவும் இடம்பெற மாட்டா.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் தாக்குதலில் சிப்பாய் பலி!

கொழும்புத்துறை முன்னணி நிலைகள் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றும் இருவர் காயமடைந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அதே சமயம் -

சரசாலை தெற்கில் கடந்த செவ்வாயன்று புலிகள் நடத்திய மோட்டார்த் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயம் அடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## துப்பாக்கிச்சூட்டில் 2 வயது குழந்தை காயம்

மட்டக்களப்பு,செப்.14

மட்டக்களப்பு புன்னைச்சோலையிலிருந்து படுவான்கரையில் தமது உறவினர்களைப் பார்ப்பதற்காக நேற்றுக் காலை 8.30 மணியளவில் சென்ற பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் இரண்டு வயதுக் குழந்தை ஒன்று காயமடைந்தது.

வவுணதீவு பிரதேச செயலகத்துக்கு அருகிலுள்ள முகாமில் சோதனையை முடித்துக்கொண்டு பொதுமக்கள் படுவாங்கரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயம் -

முகாமிலிருந்து இருநூறு யார் தூரத்தில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

தாயாரின் இடுப்பிலிருந்த இந்தக் குழந்தை காயம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-21)

## யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி இன்று மறியல் போராட்டம்!

கொழும்பு,செப்.14

உடனடி யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி மறியல் போராட்டம் ஒன்று இன்று காலை 10.30 மணி முதல் கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலயம் முன்பாக இடம் பெறவுள்ளது.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் சார்பில் தனித்துவ வேட்பாளராக யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் க.தேவதாசனின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த மறியல் போராட்டத்தில் இடதுசாரி அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்குபற்றுவர்.

இந்த மறியல் போராட்டத்தில் பங்குபற்றுமாறு யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளுக்கும், வெகுஜன அமைப்புக்களுக்கும் அழைப்பு விடுத்திருப்பதாக தாசன் நேற்றிரவு தெரிவித்தார்.

## ஆரையம்பதியில் 2 இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு!

மட்டக்களப்பு,செப்.14

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதியில் மரணச்சடங்கு ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்கள்.

நேற்றுமுன்தினம் இரவு பத்து மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பூபாலபிள்ளை ஸ்ரீகாந்த் (வயது 23), கனகசபை கருணாகரன் (வயது 22) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். (இ-3-21)

## நாடாளுமன்றைத் தொடர்ந்தும் கூட்டுமாறு வேண்டுகோள்!

### அமைச்சர் வீரக்கோன் விடுக்கிறார்

கொழும்பு,செப்.14

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்காக இன்று கூட்டப்பட்டுள்ள நாடாளுமன்றம் தேர்தல் வரை தொடர்ந்தும் கூட்டப்படவேண்டும் என்று அமைச்சர் பட்டி வீரக்கோன் கேட்டுள்ளார்.

தேர்தல் வன்முறைகள் மற்றும் தேர்தல் தொடர்பான விடயங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் கைது!

மட்டக்களப்பைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொழும்பில் விடுதி ஒன்றில் வைத்துக் கடந்த 5ஆம் திகதி பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு பிள்ளையின் தந்தையான துரைராஜா தங்கராஜா (வயது 25) என்பவரே கைதுசெய்யப்பட்டவர் ஆவார். (இ-8)

## யாழ். மக்களின் துயரங்களை இந்தியத் தூதர் கேட்டறிந்தார்

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் சண்டை காரணமாக மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் மற்றும் இடம் பெயர்வுகள் குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் கோபால் கிருஷ்ணகாந்தி கேட்டறிந்து கொண்டார்.

நேற்று அவரைச்சந்தித்த புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ஈரோஸ் அமைப்பின் செயலாளர் எஸ்.சுதாகரன் ஆகியோரிடமே அவர் விவரங்களை ஆர்வத்துடன் கேட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயக மரபுகளை ஏற்றால் மாத்திரமே புலிகளுடன் பேச்சு!

### பிரதமர் ரத்னசிறி கூறுகிறார்

கொழும்பு,செப்.14

விடுதலைப் புலிகள் தங்களது பயங்கரவாதச் செயற்பாடுகளைக் கைவிட்டு நாடாளுமன்றச் சம்பிரதாயத்தையும் ஜனநாயக மரபுகளையும் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தமுடியும். அதற்கு மட்டுமே நாம் தயாராக இருக்கின்றோம்.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

சிறுபான்மை மக்களும் இந்த நாட்டில் வாழ உரித்துடையவர்கள் என்பதை மகா சங்கத்தினர் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும், மகா சங்கத்தினர் இந்த அடிப்படை விடயத்தை ஏற்றுக்கொண்டிருப்பதால் ஏனைய முரண்பாடுகளைத் தமிழ்க்கட்சிகளுடன் கலந்துரையாடித் தீர்த்துக் கொள்ள முடியும் என்று தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனநெருக்கடிக்குத் தீர்வு காண்

(12ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் வாகன அணி மீது வாழைச்சேனையில் தாக்குதல்

மட்டக்களப்பு,செப்.14

மட்டக்களப்பிலிருந்து பொலன்னறுவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த படையினரின் வாகன அணி மீது நேற்று நண்பகல் 1.40 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 5 படையினர் காயமடைந்தனர்.

வாழைச்சேனை கொக்காக்கோலை சந்தியில் மரமொன்றில் இந்த கிளைமோர் பொருத்தி வைக்கப்பட்டிருந்தது. காயமடைந்த சிப்பாய்கள் பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். படையினர் சென்ற பஸ் பலத்த சேதத்துக்குள்ளானது. (இ-3-8-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

எங்கள் தலைவரை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சி.சுப்பிரமணியம ஜே.பி.

(தலைவர், தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி.)

நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டு 11-09-2000 அன்று யாழ். நீதிமன்றில் நீதிவான்

பா.சுப்பிரமணியம்

முன்னிலையில் சமாதான நீதிவானாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட எங்கள் தலைவர்

**திரு.சின்னப்பிள்ளை சுப்பிரமணியம்**

அவர்களுக்கு எங்கள் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கத்தின் தலைவராகவும், யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை போன்றவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் செயற்பட்டுவரும் இவரது கூட்டுறவுப் பணிகள் தொடர மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பணிப்பாளர் சபை,**

*தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கம், கைதடி.*

தற்காலிக முகவரி:
*இணுவில் ஆஸ்பத்திரி,*
*இணுவில்.*

(C/12927)


## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா கலந்து கொள்வார். திருமதி கமலா குணராசா பரிசில்களை வழங்குவார். (ஐ-ரி)

## தேர்தல் ஆணையாளருக்கு 9 கட்சிகள் ஆதரவு தெரிவிப்பு

வாக்குச் சீட்டுக்களுக்கான "ஸ்ரிக்கர்கள்" அச்சிட்ட விவகாரம் தொடர்பாக அரசின் சந்தேகப் பார்வைக்கு இலக்காகி உள்ள தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவுக்கு ஒன்பது அரசியல் கட்சிகள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளதாக "திவயின" பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஐ.தே.கட்சி, ஜே.வி.பி, சிஹல உறுமய, முஸ்லிம் கட்சி, பிரஜைகள் முன்னணி, பூமிபுத்ர கட்சி, ஜன நாயக ஐக்கிய தேசிய முன்னணி, லிபரல் கட்சி, லலித் முன்னணி ஆகிய கட்சிகளே தேர்தல் ஆணையாளருக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் ஆவணி மாதம் 29 ஆம் நாள் இன்று (14.09.2000) வியாழக்கிழமை பகல் 7.44 மணி முதல் 9.29 மணிவரையுள்ள பிரதமை திதியும், தனுலக்கினமும் உத்திரட்டாதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபமுகூர்த்தத்தில்,

திரு.அ.சிவபாதம் சத்தியபாமா
தம்பதிகளின் புதல்வன்
திருநிறை செல்வன்
**தயாகரன்** (கனடா)



திரு.நா.தர்மராஜா விஜயலட்சுமி
தம்பதிகளின் புதல்வி
திருநிறை செல்வி
**ரஜனி**

ஆகிய இருவருக்கும் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, திருகோணமலை ஸ்ரீ விஸ்வநாத சுவாமி சிவன் ஆலய மண்டபத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்து அதனைத் தொடர்ந்து திருகோணமலை பிரதான வீதியில் அமைந்துள்ள பிருந்தாவனம் வரவேற்பு மண்டபத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தாங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி அ.சிவபாதம்
இல.116, மோதர வீதி,
கொழும்பு - 15.

திரு.திருமதி தர்மராஜா
நெற்கொழு வீதி, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

*இரு வீட்டார் அழைப்பு*

(C/12922) சுகுணலக்ஷ்மி ஆடையகம், பருத்தித்துறை.



## நாகம்ஸ்
சுன்னாகம்

இன்று மட்டும்
அஜித் - ஷாலினி
நடிப்பில்

**அமர்க்களம்**

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

நாளை முதல்
விஜய் - சிம்ரன்
நடிப்பில்

**துள்ளாத மனமும் துள்ளும்**

(C/12925)



## ராஜா
(யாழ்ப்பாணம்)

இன்று மட்டும்
கார்த்திக், கௌசல்யா, அப்பாஸ், ஹீரா, ராதாரவி
மற்றும் பலரின் நடிப்பில்

**பூவேலி**

காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே)

நாளை முதல்
ரோஜா, கார்த்திக், அஜித்
மற்றும் பலரின் நடிப்பில்

**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**

(C/12919)



# UNIVAC
## College of Computer Information Technology

British ACP Reconized Training Centre



### Computer Studies

**Diploma in Microsoft office 2000**
Microsoft word 2000
Microsoft Excel 2000
Microsoft Access 2000
Microsoft Power point 2000
Windows 95 & 98
Multimedia

Full Payment ~~8000/=~~ 5000/=
Dueration 5 Month

**Diploma in Computer Hardware**
*Full Payment 10,000/= , 8 month*

**Childrand Programs** 500/=

Start 18/09/2K

### Computer Printing

பல்கலைக்கழக மாணவர்களிற்கான ஆய்வுக் கட்டுரைகள் Colour Inkjet / Lazer Printer ஊடாக குறைந்த செலவில், நவீன தொழில் நுட்பத்தில் Computer Printing செய்து கொடுக்கப்படும்.

Director
UNIVAC

K.K.S Road
Narchchimar kovil
Jaffna.



உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆவணித்திங்கள் 30ஆம் நாள் (15.09.2000) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிமுதல் 9.00 மணிவரை வரும் கன்னி இலக்கினமும் உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**முருகதாசன்**
(பொறியியலாளர், பிறவுன்ஸ் அன்ட் கம்பனி)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**கஜானி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்ய தாரணஞ் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு கொள்ளுப்பிட்டி பல்மேரா அவெனியூவில் உள்ள மக்னெற் கல்யாண மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்து, நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

**திருமதி தம்பிராசா,**
அரசகேசரி வளவு,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

**திருமதி செ.மகேஸ்வரி,**
**திரு.திருமதி சூரியகுமாரன்,**
'மகேஸ் வாசா",
ஆனையிறவு.

*இரு வீட்டார் அழைப்பு*

(C/12928)



* யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தையும்
* சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வடக்கு - கிழக்கு இணைப்பும் அரசியல் தீர்வும்
* சமாதானம் - இயல்பு வாழ்க்கை - ஜனநாயகம் - மனித உரிமை

அடிப்படை அரசியல் கோரிக்கைகளை வென்றெடுக்க வாக்களியுங்கள்!!





ஜனநாயக
இடதுசாரி
முன்னணி

**சி.கா.செந்திவேல்**
முதன்மை வேட்பாளர்

**சோ.தேவராஜா**
பிரதான வேட்பாளர்

(78209)

# இந்தியாவுடன் எந்த நேரத்திலும் யுத்தம் புரிய பாகிஸ்தான் தயார்!

## முஷாரப் அறைகூவல்!!



பர்வேஷ் முஷாரப்

இஸ்லாமாபாத்,செப்.14

இந்தியாவுடன் எந்த நேரத்திலும் போர் புரியத் தயார் என்று பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் அறைகூவல் விடுத்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய முஷாரப் இதனைத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் இராணுவம் பல மாதங்களாக யுத்தத் திற்குத் தயாராக உள்ளதாகவும், இந்தியாவுடன் எந்த நேரத்திலும் போரிட ஆயத்தமாக தமது இராணுவம் இருப்பதாகவும் தெரிவித்த முஷாரப் -

போரினால் ஏற்படும் எந்த வித மோசமான விளைவுகளையும் சந்திப்பதற்கு இந்தியா தயாராக இருக்க வேண்டும் என்றும் -

எல்லை கடந்த தாக்குதல்களுக்கு இந்தியாவே பொறுப்பு என்றும் கூறியுள்ளார்.

கடந்த வாரம் அமெரிக்காவில் நடைபெற்ற புத்தாயிரமாண்டின் ஐ.நா. உச்சிமாநாட்டில் முஷாரப் உரையாற்றிய போது இந்தியாவுடன் எந்த நேரத்திலும் சமாதானப் பேச்சுக்களை நடத்த பாகிஸ்தான் தயாராக உள்ளதாகவும் -

எல்லைப் பிரச்சனையைத் தீர்க்க தயார் என்றும் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# ஆஸ்திரேலிய விமான நிலையத்தில் மர்மப்புகை; 40 பேர் மயக்கம்!

சிட்னி,செப்.14

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் குளிரூட்டிக் கருவி ஒன்றிற்குள் இருந்து வெளியேறிய மர்மப்புகையால் அங்கிருந்த சுமார் 40பேர் மயங்கி விழுந்தனர்.

மூச்சுத் திணறல்,கண்ணெரிச்சல் ஆகியவற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட அவர்களை வாயுக்கவசம் அணிந்து விமான நிலையத்திற்குள் நுழைந்த தீயணைப்பு வீரர்கள் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

விமானங்கள் புறப்படும் பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டபோது பயணிகள் வருகைப் பகுதியில் ஒலிம்பிக் வீரர்கள் சிலர் இருந்ததாகவும் அதிர்ஷ்டவசமாக அவர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது. (ஒ)

## மேற்குத்திமோரில் வன்முறை

# இந்தோனேசிய அரசுக்கு உலகவங்கி எச்சரிக்கை!

வாஷிங்ரன்,செப்ரெம்பர்14

**மேற்குத் திமோரில் இடம்பெறும் வன்முறைகளை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்தோனேசியாவிற்கு வழங்கப்படும் நிதியுதவிகள் நிறுத்தப்படும் என்று உலகவங்கி எச்சரித்துள்ளது.**

இந்தோனேசியாவின் அதிகாரத்தில் இருந்து கிழக்குத்திமோர் கடந்த ஆண்டு சுதந்திரம் பெற்ற போது அங்கு வெடித்த வன்முறைகளில் இருந்து உயிர்தப்ப ஆயிரக் கணக்கான பொதுமக்கள் மேற்குத் திமோருக்கு அகதிகளாகச் சென்றனர்.

இந்தோனேசிய ஆட்சியின் கீழ் இருந்து வரும் மேற்குத் திமோரில் இந்தோனேசிய அரசு சார்பு ஆயுதக் குழுக்கள் அந்த அகதிகளை மீண்டும் கிழக்குத் திமோருக்குச் செல்லவிடாமல் தடுப்பதோடு, அங்கு நிவாரணப்பணிகளை மேற்கொள்ளும் ஐ.நா.ஊழியர்களை தாக்கியும் வருகின்றன. இந்தத் தாக்குதலில் 3 ஐ.நா. ஊழியர்கள் கொல்லப்பட்டதுடன், மற்ற ஊழியர்கள் அங்கிருந்து வெளியேறியதால் கிழக்குத்திமோர் அகதிகளின் நிலை பரிதாபத்துக்குரியதாகி உள்ளது.

இந்தநிலையில் உலக வங்கித் தலைவர் ஜேம்ஸ் வூல்பென்சன் இந்தோனேசிய அதிபர் அப்துல் ரஹ்மான் வாகிட்டுக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் பல உயிர்கள் பலியாக முன்னர் மேற்குத்திமோரில் இடம்பெறும் வன்முறைகளை நிறுத்தும்படியும் -

உலக அரங்கில்

கிழக்குத் திமோர் மக்களுக்கான ஐ.நா. பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, அவர்கள் தமது இருப்பிடங்களுக்குச் செல்லும் நிலை உருவாக்கப்பட வேண்டும் என்றும் -

இதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் உலக வங்கியின் நிதி உதவிகள் நிறுத்தப்படும் என்றும் -

அந்தக் கடிதத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# பேச்சைத் தொடங்காவிட்டால் இந்தியாவில் வன்முறை பரவும்!

## முஜாஹிதீன் தலைவர் எச்சரிக்கை!!



சையத் சலாவுதீன்

ஜம்மு,செப்.14

சமாதானப் பேச்சுக்களை முன் னெடுக்காது விட்டால் காஷ்மீருக்கு வெளியேயும் தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தப் போவதாக ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கத்தலைவர் சையத் சலாவுதீன் எச்சரித்துள்ளார்.

சமீபத்தில் அவர் வெளியிட்ட அறிக்கையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்,

தமது அமைப்பு இந்திய அரசுடன் பேச்சு நடத்தத் தயாராக உள்ளதாகவும் ஆனால் பேச்சுக்கள் நடத்துவதற்கான முன்முயற்சிகளை இந்தியாவே ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்களைத் தொடங்க இந்தியா தொடர்ந்து தயக்கம் காட்டினால் காஷ்மீரில் மட்டுமல்லாது, இந்தியாவின் மற்றைய பகுதிகளிலும் தீவிரவாத நடவடிக்கைகளை விரிவுபடுத்தப் போவதாக சையத் சலாவுதீன் எச்சரித்துள்ளார். (ஒ-5)

# சர்வதேச விண்தளத்தில் விண்வெளி வீரர்கள்



ஏழு விண்வெளிவீரர்களுடன் சென்ற அட்லான்டிக் விண்கலம் சர்வதேச விண்தளத்தை நெருங்கிய போது விண்கலத்திலிருந்து எடுத்த படம். பின்னணியில் தெரிவது பூமி.



விண்கலத்தில் இருந்து விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்தளத்துக்குள் நுழைகிறார்கள்.



விண்தளத்துக்குள் நுழைந்த வீரர் ஒருவர் தளத்தில் உள்ள வழிகளை அறிந்துகொள்ள கையேட்டை படித்துப் பார்க்கிறார்.



விண்தளத்துக்கும் விண்கலத்துக்கும் இடையிலான 'கேபிள்' இணைப்புகளை விண்வெளியில் மிதந்தபடி இணைக்கும் பணியில் வீரர்கள் ஈடுபடும் காட்சி.

## யுத்த நிறுத்தத்தை விஸ்தரிக்க

# நாகலாந்து தீவிரவாதிகள் இந்தியாவுக்குக் காலக்கெடு

புதுடில்லி,செப்.14

இந்தியாவின் நாகாலாந்து மாநிலத்தில் கடைபிடிக்கப்படும் யுத்த நிறுத்தம் நாளை வெள்ளிக்கிழமைக்குள் நாகர்கள் வசிக்கும் பிறபகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படாவிட்டால், தாம் கடைப்பிடிக்கும் போர் நிறுத்தத்தை விலக்கிக் கொள்ளப்போவதாக நாகலாந்து தேசிய சபையில் அங்கம் வகிக்கும் "நுய்வா" பிரிவு காலக் கெடுவிதித்துள்ளது.

நாகலாந்தில் பிரிவினை கோரும் இயக்கங்கள் ஒன்றிணைந்து அமைந்துள்ள தேசிய சபை கடந்த ஆண்டு முதல் யுத்த நிறுத்தம் அறிவித்து இந்திய அரசுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தி வருகிறது.

அந்தச் சபையில் அங்கம் வகிக்கும் 'நுய்வா' பிரிவினர், போராட்டங்கள் நிகழும் பிற வடகிழக்கு மாநிலங்களான மணிப்பூர், மிஜோராம், அஸாம், மேகாலயா, ஹிமாசல் பிரதேசம் ஆகியவற்றிலும் யுத்த நிறுத்தத்தை மத்திய அரசு அறிவிக்கவேண்டும் என்று கோரியுள்ளனர்.

நாகலாந்தை அடுத்துள்ள நாகர்கள் வசிக்கும் வடகிழக்கு மாநிலங்களுக்கும் விரிவாக்க வேண்டும் என்ற நீண்டகால எண்ணத்திற்கு அங்கீகாரம் கிடைக்கவே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. (ஒ-5)

## எண்ணெய்விலை உயர்வு எதிரொலி

# சுத்திகரிப்பு ஆலைகள் முற்றுகை; பிரிட்டனில் பெற்றோல் தட்டுப்பாடு!

பிரிட்டனில மசகுஎண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டுள்ளதால் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக ஐரோப்பிய நாடுகளில் பெற்றோலிய எரிபொருள்களின் விலை தாறுமாறாக உயர்ந்து வந்தது. இந்த உயர்வு வழக்கமான விலையிலும் 50 சதவீதம் அதிகரித்ததை அடுத்து வாகன உரிமையாளர்கள், விவசாயிகள் உட்பட பொதுமக்கள் பலரும் போராட்டங்களில் இறங்கினர்.

ஜேர்மனியில் போக்குவரத்து ஸ்தம்பிக்கும் அளவிற்குப் போராட்டம் தீவிரமடைந்தது.

பிரிட்டனில் முக்கிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டுள்ளதால் பெற்றோல் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

எண்ணெய் உற்பத்தி நாடுகள் உற்பத்தியை அதிகரித்துள்ள போதிலும் உலக சந்தையில் மசகு எண்ணெய்விலை குறையவில்லை. இந்நிலையில் ஐரோப்பிய நாடுகளில் போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன. (ஒ-8)

## பூமி அதிர்ச்சி

இந்தியாவில் மத்தியப் பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களில் நேற்றுமுன்தினம் 3.7 ரிக்டேர் அளவிலான பூமிஅதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

'ஒன்றாய் இன்னும் நாமில்லையேல்
விடுதலை என்றும் எமக்கில்லை' -
செயலதிபர்.க.உமாமகேஸ்வரன்
ஒற்றுமையை வளர்த்திட அதன் சின்னமாய் விளங்கும்
எம்மை ஆதரித்திடுவீர்!

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம்
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
(புளொட் + ஈரோஸ்)

X

# செழியனின் மறைவுக்கு செய்தியாளர் சங்கம் அனுதாபம்

அம்பாறை, செப். 14

முன்னாள் மேயரும், பொ. ஐ. முன்னணி வேட்பாளருமான செழியன் ஜே. பேரின்பநாயகத்தின் மறைவு குறித்து கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் அனுதாபச் செய்தி ஒன்றை விடுத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிழக்கு மாகாணத்தின் மூத்த பத்திரிகையாளரில் ஒருவரும் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் முன்னாள் தலைவருமான செழியன் ஜே. பேரின்பநாயகத்தின் அகால மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். இறுதி வரை எழுத்துத்துறையையும் எழுத்தாளர்களையும் நேசித்த அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்கிறோம்—

மாணவப்பருவத்திலிருந்தே பத்திரிகை எழுத்துத்துறைக்கெனத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட செழியன்பேரின்பநாயகம் 1994 இல் அரசியலில் பிரவேசிக்கும் வரை எழுத்துத்துறையையே தன் முழுநேரத்தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர். செய்தித்துறையை உயிராக மதித்தவர். 'தினகரன்' பத்திரிகையின் செய்தியாளனாக நீண்டகாலம் பணிபுரிந்தவர். மட்டக்களப்பு தமிழ் மாணவ மன்றத்தலைவராக இருந்த காலத்திலும் சரி, மட்டக்களப்பு சமாதானக்குழுச் செயலாளராக இருந்த காலத்திலும் சரி அவர் மக்களின்துயர் துடைப்பதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத் தலைவராக இருந்த காலத்தில் சங்கத்தின் செயற்பாடுகளுக்குத் தூணாக விளங்கியவர். 1990 களின் பின் மட்டக்களப்பு சமாதானக்குழுச் செயலாளராக இருந்த அவர் மக்களுக்கு ஆற்றிய பணியை மக்களால் மறக்கமுடியாது. மனிதநேயமிக்க பத்திரிகையாளனை, சமூகசேவையாளனை மட்டக்களப்பு இழந்திருக்கிறது அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம் — என அந்தச் செய்தியில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-14)

# 99 க்குரிய இடர்க்காலப்படியை காலம் தாழ்த்தாமல் வழங்குக!

## தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு மகஜர்

யாழ்ப்பாணம், செப். 14

வடக்கு — கிழக்கு அரச உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பாரிய ஆபத்துக்களைப் பரிசிலித்து 1999 ஆம் ஆண்டுக்குரிய இடர்ப்படியை காலம் தாழ்த்தாது வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம்.

இவ்வாறு வடபிராந்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அம்சங்கள் வருமாறு:

வடக்கு — கிழக்கு மாகாணத்தின் — விசேடமாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் — தள நிலைமைகள் பற்றித் தாங்கள் அறிவீர்கள். யாழ்ப்பாணத்தில் கடந்த மேமாதம் பத்தாம் திகதிக்குப் பின்பு போர் உக்கிரமடைந்தது.

பச்சிலைப்பள்ளி, தென்மராட்சிப் பிரதேசங்களினதும் நல்லூர் கிழக்குப் பிரதேசத்தினதும் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பெரும்பாலோர் வலிகாமத்திலும், வடமராட்சியிலும், அகதி முகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும் தங்கியுள்ள அதேவேளை சிலர் நண்பர்களுடனும் உறவினர்களுடனும் தங்கியுள்ளனர். அம்மக்கள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்துள்ளனர். அரச அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் இந் நிலைமைக்கு விதிவிலக்கன்று.

★ பச்சிளைப்பள்ளி, தென்மராட்சி, நல்லூர் கிழக்குப் பகுதிகளிலுள்ள அரச அலுவலகங்களும், பாடசாலைகளும் கூட இடம்பெயர்ந்துள்ளன. அவையும் வலிகாமத்திலும் வடமராட்சியிலும் இயங்குகின்றன.

★ கச்சேரிஉட்படஅரசாங்கத் திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் என்பனவற்றில் பெரும்பாலானவை மாநகர எல்லைக்குள்அமைந்துள்ளன. அவற்றில் சில முன்னரங்க இராணுவ நிலைகளுக்குக் கிட்டவுள்ளன. போரிடும் பகுதியினர் ஏவும் எறிகணைகள் யாழ்ப்பாண நகரத்துக்குள்ளும் சூழலிலும் வீழ்ந்து வெடித்துள்ளன. மேலும் அடிக்கடி துப்பாக்கிச் சமர்களும் நடைபெறுகின்றன குறைந்தது இரண்டு உத்தியோகத்தர்கள் இறந்துள்ள அதேவேளை பலர் காயமடைந்துள்ளனர்.

★ நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர், இடப்பெயர்வு என்பனவற்றைப் பொருட்படுத்தாது, அரச நிறுவனங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. பெரும் அபாயத்தின் மத்தியில் உத்தியோகத்தர்கள் தமது அலுவலகத்திற்குச் சமுகமளித்து தமது கடமைகளை ஆற்றி வருகின்றனர். வீட்டிலிருந்து அலுவலகத்துக்கு வரும்போதும் வீடு திரும்பும் போதும் அவர்கள் பெரும்அபாயத்தை எதிர் நோக்குகின்றனர்.

★ 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம்பெயர்ந்து நாம் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் 1996 ஆம் ஆண்டு எம்மில் பெரும் பகுதியினர் ஏப்ரல் மாதம் மீளக்குடியமர்ந்தோம். 1996 ஆம், 1997 ஆம், 1998 ஆம் ஆண்டுகளில் உரிய இடர்ப்படி அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. அதன்பின்பு, தள நிலைமையில் மாற்றமெதுவுமில்லாத போதிலும் இடர்ப்படி வழங்கப்படவில்லை.

★ போரால் ஏற்பட்டுள்ள உயிராபத்து, மன உளைச்சல் என்பனவற்றோடு இப்பிரதேச அரச அலுவலர்களும் மக்களும் தமது நுகர்வுப் பொருள்களுக்கு நாட்டின் பிற்பகுதிகளைக் காட்டிலும் கூடிய விலையைச் செலுத்துகின்றனர், போர்ச் சூழலில் வாழ்ந்து கடமையாற்றி வரும் அலுவலர்களுக்கு இடர்ப்படி வழங்கப்படாது விட்டால் அவர்களின் உற்சாகம் குன்றுமென்பதை தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்த விரும்புகின்றது.

[ஐ-173]

# கேள்வி அறிவித்தல்

## அரசாங்க அதிபர் மாவட்டச் செயலகம் (கச்சேரி), யாழ்ப்பாணம்.

1. கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையினரால் 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 04 ஆம் திகதி முற்பகல் 10 30 மணிவரை யாழ்ப்பாணம், அரசாங்க அதிபர் மாவட்டச் செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் அதே அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரங்களும் அல்லது அதற்குமேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், செயலகத்தில் செலுத்திய பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரங்களை 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி பிற்பகல் 3. 00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. புனருத்தாரண வேலை நிருவாகக் கட்டடத் தொகுதி, சுற்றியல்கூறு சங்கானை. | எம் — 5 இலும் அதற்கு மேலும் | 15,000/- | 1,000/- |
| 02. 14 கட்டில்கள் கொண்ட வார்ட் ஆண்/பெண் நிர்மாணித்தல், கிராமிய வைத்தியசாலை,பண்டத்தரிப்பு. | எம் — 7 இலும் அதற்கு மேலும் | 6,000/- | 1,000/- |
| 03. நிர்மாணம் தரம் (5) வைத்திய அதிகாரி பணிமனை, கிராமிய வைத்திய சாலை, பண்டத்தரிப்பு | எம் — 8 இலும் அதற்கு மேலும் | 10,000/- | 1,000/- |
| 04. சமையலறை நிர்மாணித்தல், கிராமிய வைத்தியசாலை, பண்டத்தரிப்பு. | எம் — 9 இலும் அதற்கு மேலும் | 8,000/- | 1,000/- |
| 05. மகப்பேற்று வார்ட் நிர்மாணித்தல், (14) கட்டில்கள் கிராமிய வைத்திய சாலை, பண்டத்தரிப்பு. | எம் — 7 இலும் அதற்கு மேலும் | 8,000/- | 1,000/- |
| 06. ஊர்காவற்றுறை சந்தைக் கட்டடம் புனருத்தாரண வேலை ஊர்காவற்றுறை. | எம் — 8 இலும் அதற்கு மேலும் | 8,000/- | 1,000/- |
| 07. ஊர்காவற்றுறை உணவுக் களஞ்சியத் திருத்த வேலை. | எம் — 8 இலும் அதற்கு மேலும் | 5,000/- | 1,000/- |

5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் வழங்கப்படும்.
6. இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்று பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை தற்காலிக காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

க. சண்முகநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

மாவட்டச் செயலகம்,
கச்சேரி, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/12917)

# நயினை செல்லும் பயணிகளுக்கு 'குமுதினி' படகில் இடம் ஒதுக்குக!

## அப்பிரதேச மக்கள் மகஜர்

நயினாதீவிலிருந்து குறிகாட்டுவானுக்குச் செல்லும் பயணிகளும், குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்குச் செல்லும் பயணிகளும் குமுதினிப் படகில் பயணம் செய்வதற்கு வேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நயினாதீவு மக்கள், வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகர குருமூர்த்தியிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் தமது கோரிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

நெடுந்தீவிற்குச் செல்லும் பிரயாணிகளின் நலன் கருதிச் சேவையில் அமர்த்தப்பட்டிருக்கும் குமுதினிப்படகானது வாரத்தில் வியாழக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் நெடுந்தீவுப் பிரயாணிகளுக்கான சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. இப்படகானது நயினாதீவுத் துறைமுகத்திலிருந்து குறிகாட்டுவானுக்குச் சென்று அங்கிருந்து நெடுந்தீவுக்குச் செல்லும் பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. பின்னர் நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் வரை வந்து நெடுந்தீவுப் பிரயாணிகளைத் தரை இறக்கிய பின்னர் நயினாதீவுக்குச் சென்று தரித்து நிற்கின்றது. எனினும் நயினாதீவிலிருந்து குறிகாட்டுவானுக்குப் புறப்படும் போதும் குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்குச் செல்லும்போதும் நயினாதீவுக்கு வந்துபோகும் பிரயாணிகளை இப் படகில் ஏற்றுவதற்கு அனுமதிப்பதில்லை.

இதனால் நயினாதீவு நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களும் ஏனையவரும் இப்படகில் பயணம் செய்ய முடியவில்லை என்பதையிட்டு மிகவும் மனவருத்தம் அடைகின்றனர், நயினாதீவிற்கும் குறிகாட்டுவானுக்குமான சேவையில் நாளொன்றுக்கு ஒரு படகே சேவையில் ஈடுபடுத்தப்படுவதால் பெருந்தொகையான பயணிகள் இப்படகில் ஏற்றப்படுவதாலும் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே குமுதினிப்படகில் நயினாதீவுக்கு வந்து போகும் பிரயாணிகளும் பயணம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோருகிறோம் — என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-157)

# முன்பள்ளிக்கான கதைப்புத்தகங்கள் விநியோகம்

'யுனிசெவ்' நிறுவனத்தால் வழங்கப்பட்ட முன்பள்ளிச் சிறுவர்களுக்கான செயற்பாட்டுக் கதைப்புத்தகங்கள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல்2மணிக்கு கரவெட்டி திருஇருதயக் கல்லூரி மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வடமராட்சி தென்மராட்சி மற்றும் பளைப் பகுதிகளைச் சேர்ந்த குறித்த முன்பள்ளி ஆசிரியர்கள் சமூகம் தந்து புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி கேட்டுள்ளார். (க • 10)

உதயன்

## நல்லாட்சி உருவாக.....

இலங்கைப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் இன்று 14ஆம் திகதி கூடு கிறது. புதிய நாடாளுமன்ற உறுப்பி னர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் களைகட்டியிருக்கும் இவ் வேளையில், பழைய நாடாளுமன்றம் ஏன் கூடுகிறது? அது ஏற்றுக் கொள் ளக்கூடிய செயற்பாடா?

மேலும் ஒருமாத காலத்துக்கு அவசரகாலச் சட்டத்தின்கீழ் நாட்டை வைப்பதற்கே - ஆட்சி செய்வதற்கே இந்த ஏற்பாடு. அதாவது அவசர காலச் சட்டம் நடைமுறையில் இல்லா மல் இந்த நாட்டை ஒரு நாளைக் கேனும் நிர்வகிக்க முடியாது - ஆட்சி செய்ய முடியாது - என்ற வெட்கமான தன்மையையே இது பிரதிபலிக்கிறது.

அவசரகாலச் சட்டம் மக்களின் பல உரிமைகளைப் பறிப்பதோடு, ஆட்சியில் உள்ளோர் - பதவி வகிப் போர் - தமக்கு வேண்டியதைச் செய்து முடிக்கவும் அதிகாரம் வழங்கு கிறது.

அதனைக் கண்டபடி, உகந்த காரணமின்றி நடைமுறைக்குக் கொண்டுவந்து மக்களை அடக்கு முறைக்கு உட்படுத்தக் கூடாது என்று இதனைப் பல வருடங்க ளுக்கு முன்னர் இயற்றியவர்கள் கருதி யிருக்கவேண்டும்.

அதனாலேயே அமைச்சர்கள் தாம் நினைத்தாற்போல அதனை நடைமுறைப் படுத்தக் கூடாது; மக் கள் பிரதிநிதிகள் சபையான நாடா ளுமன்றத்தின் அங்கீகாரம் பெற வேண்டும் என்ற விதியைச் சேர்த் திருக்க வேண்டும்.

ஆனால் இப்போதெல்லாம், மிகப் பல வருடங்களாக அரசாங்க ஆட்சி யின் அத்திவாரமாக அவசரகாலச் சட்ட அமுல்தான் என்ற நிலை தொடர்ந்து வருகிறது. அவசரகாலச் சட்டத்தின் கூரிய பற்களைக் கடிக்காத காலம் மிகக் குறைவு.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை சீராக இல்லை என்ற சிட்டை மக்க ளுக்குக் காட்டி - அதற்கான கார ணங்களைப் பெரிதுபடுத்தி - அவசர காலச் சட்டத்தை அரசுகள் நடை முறைக்குக் கொண்டுவருவது இயல் பாகிவிட்டது.

போர் தொடர்வதால் அவசரகா லச் சட்டத்தை நீடிப்பது அத்தியாவ சிய தேவை என்ற நிலைமையைப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அர சும் பெரும் வாய்ப்பாகப் பயன்படுத்தி வருகிறது.

1994ஆம் ஆண்டு பதவிக்கு வந்த போது - கடந்த பொதுத் தேர்தலில் - போரை நிறுத்துவதாகவும் சமா தானப் பேச்சுக்கள் - அரசியல் பேச் சுக்கள் - மூலம் இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதாகவும் பொ.ம.ஐ. முன்னணி உறுதி அளித்திருந்தது.

எனினும் தாம் நீட்டிய நட்புக் கரத்தை விடுதலைப் புலிகள் தட்டி விட்டார்கள் என்று கூறி, பதவிக்கு வந்த சில மாதங்களில் போர் மூலம் சமாதானம் என்ற புதிய நிலைப் பாட்டை ஜனாதிபதி வரித்துக்கொண் டார். அந்த நிலைப்பாடு போரை முடிவின்றி இழுத்துச்செல்லவும்; அதன் மூலம் சுலபமாக காலத்தை வாங்கிப் பதவியைச் சிறு பழுதுமின்றி ஆறு வருடங்களுக்கும் தக்க வைக் கவும் உதவியது!

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்பட்டால் போர் நின்று விடும். அவசரகாலச் சட்டமும் தேவையில்லை. இதற்கான அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்துவது தென் னிலங்கை மக்களின் கைகளிலேயே உள்ளது. அவர்கள் போரினால் பாதிக்கப்படுகிறார்களோ இல்லையோ, அவசரகாலச் சட்டத்தினால் நிச்சயம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதனை அடித்துச் சொல்லலாம்.

தமிழ் இளைஞர்களை தண்டிக்க வெனக் கொண்டுவரப்பட்ட பயங்கர வாதத் தடைச்சட்டம், சிங்கள மக் களின் உரிமைகளையும் பறிக்கும் சட்டமாகி உள்ளதாக, கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகள் கண்டித்துக் கட்டுரைகள் வெளியிடும் அளவிற்கு நிலைமை மோசமாகி உள்ளது. அவசரகாலச் சட்டம் குறித்தும் அதே அனுபவமும் உணர்வும் அவர்களிடம் உள்ளன என்று நம்பலாம்.

ஆகையால் அவசரகாலச் சட்டத் தைக் கண்ணை மூடிக்கொண்டு ஆட்சியாளர்கள் பயன்படுத்த இடம் கொடுக்காமல் பார்த்துக் கொள்வ தில், சிங்கள மக்கள் அதிக அக் கறை காட்டவேண்டும்; அவர்க ளுக்கு மிகக் கூடுதலான பங்கு உண்டு. அதாவது, போரை நிறுத்து வதற்குக் கட்டாயப்படுத்தும் வகை யில் தமது வாக்கை இம்முறை பயன் படுத்தினால் நல்லாட்சி உருவாக அவர்களால் உதவ முடியும்.

# உள்ளூராட்சிச் சபைகளுக்கு நிதி ஒதுக்குவதில் பாரபட்சம்!

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சிவாஜிலிங்கம் முறையீடு

யாழ்ப்பாணம்,செப்.14

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு இடையே நிதி ஒதுக்கீடு மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் பாரபட்சம் காட்டப்படுவ தாக வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவரும், ரெலோ அமைப்பின் செயலாளருமான எம்.கே.சிவாஜி லிங்கம் யாழ். மாவட்ட ஒருங்கி ணைப்புக்குழுக் கூட்டத்தில் புகார் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டம் நேற்று முன் தினம் யாழ். நகரிலுள்ள 512 ஆவது பிரிகேட் தலைமை அலுவலகத்தில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெய வர்த்தனா, ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமை யில் நடைபெற்றது.

எம்.கே.சிவாஜிலிங்கம் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்த தாவது:-

பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகள், மாநகர சபைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் ஒரு சில அதிகா ரிகள் மட்டத்திலேயே தீர்மானிக்கப் படுகிறது. இதனால் உள்ளூராட்சிச் சபைகளுக்கான முழுமையான நிதி ஒதுக்கீடு மற்றும் அதன் பங்கீடு தொடர்பான விவரங்கள் வெளி வரு வதில்லை.

யாழ். மாநகர சபை, பருத்தித் துறை, சாவகச்சேரி மற்றும் வல் வெட்டித்துறை நகர சபைகள் முத லியவற்றுக்கு இதுவரை வாகன வசதி எதுவும் வழங்கப்படவில்லை. வாகன வசதிகளை வழங்குவதிலும் யாழ். மாவட்டத்தில் பாரபட்சம் காட் டப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

யாழ். மாவட்டத்தில் 400க்கும் அதிகமான பாடசாலைகள் உள் ளன. ஆனால் ஒரு சில பாடசாலை களுக்கே பல்வேறு திட்டங்களுக்கு மென நிதி ஒதுக்கீடு செய்யப்படு கிறது. குறிப்பாகத் தனியார் பாட சாலைகளுக்கு எந்தவிதமான நிதி ஒதுக்கீடும் செய்யப்படுவதில்லை. எனவே கல்வி நிலையிலும் பார பட்சம் காட்டும் தன்மை நீக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தல் காலத் தில் கொண்டுவரப்பட்ட - நீண்ட காலம் பாவிக்கப்பட்ட - பஸ்கள் பலவும் தற்போது பழுதடைந்த நிலையில், தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலையில் உள் ளன.

இந்த நிலையில் யாழ். மாவட் டத்தில் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென 100 பஸ்கள் தேவையென அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். எனவே தேர்தல் தினத்தன்று சகல பஸ்களும் தேர் தல் நடவடிக்கைகளுக்குப் பயன் படுத்தப்பட்டால் அன்றைய தினம் சகல மக்களும் கால் நடையாகவே திரிய வேண்டும்.

இடம்பெயர்ந்தவர்களுக்காக வாக்களிப்பு நிலையங்கள் யாவும் கொத்தணி முறையில் அமைக்கப் படும் போது வாக்களிக்கச் செல்வ தில் பொதுமக்கள் பல்வேறு கஷ் டங்களை எதிர்நோக்குவர். எனவே உடனடியாக 50 பஸ்கள் யாழ்ப்பா ணத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

இவ்வாறு சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார். (ஐ-7-5)

## சந்நிதி தேர் உற்சவத்தில் சனத்திரள்

வடமராட்சி,செப்.14

தொண்டைமானாறு செல்வச்சந் நிதி கோவில் ரதோற்சவம் நேற்று முன்தினம் பகல் சிறப்பாக நடை பெற்றது. பெரும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு முருகப்பெருமா னின் அருள் பெற்றனர்.

வடமராட்சி, வலிகாமம் பகுதிக ளில் இருந்து 30க்கும் மேற்பட்ட தூக்குக் காவடிகளும் (பறவைக் காவடி) பெரும்எண்ணிக்கையான பாற்காவடிகளும் ஆலயத்துக்கு வந்தன. (ஐ-111-173)



கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் அண்மையில் அருள்நெறி விழா இடம்பெற்றது. விழாவில் அஷ்டலக்ஷ்மி பதிப்பக அதிபர் குலபதி ஆறுமுகம் கந்தையாவின் சமய, சமூக சேவைகளைப் பாராட்டி கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந் தஜீ பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கியபோது எடுக்கப் பட்ட படம். கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா, இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் அருகில் உள்ளனர். (ஐ)

# திருப்தியான மருத்துவசேவை யாழ்ப்பாணத்தில் இல்லை!

## சுகாதார அதிகாரி கவலை

யாழ்ப்பாணம்,செப்.14

யாழ். மாவட்டத்துக்கு மருந்து வகைகளை எடுத்து வருவதில் பாதுகாப்பு அமைச்சின் தலையீடு இருப்பதனால் யாழ்ப்பாணத்தில் திருப்தியான மருத்துவ சேவை யினை வழங்க முடியாதுள்ளது.

சுகாதாரத் திணைக்கள மாகா ணப் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் செல்வி உமா சிவபாதசுந்தரம் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இவ்விடயத்தைச் சுட்டிக் காட்டினார்.

யாழ். நகரிலுள்ள 512 ஆவது பிரிகேட் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தக் கூட் டத்தில் அவர் மேலும் கூறியதா வது:-

மாவட்டத்தின் காலாண்டுக்குத் தேவையான மருந்து வகைகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு கொழும் பிலுள்ள எமது தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

தலைமையகத்தினால் எமது பட்டியலிலுள்ள சில மருந்து வகை கள் குறைக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சிற்கு அனுமதிக்காக பட்டி யல் அனுப்பப்படுகிறது. அங்கு அமைச்சு மட்டத்திலும் மருந்து வகைகள் குறைக்கப்பட்டு நாம் கோரியதை விட மிகக்குறைந்தளவு மருந்து வகைகளே இங்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

'திரிபோஷா' மாவினை கொழும் பிலிருந்து கொண்டு வருவதற்குரிய கப்பல் கட்டணத்தினை செலுத்து வதற்கு திணைக்களத்தினால் நிதி ஒதுக்கப்படுவதில்லை என்றும் அங்கு அவர் சுட்டிக்காட்டினார்.

திரிபோஷா யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுக ளைச் செய்து தருவதாக மாகாண ஆளுநரும் மாகாண பிரதம செயலா ளரும் உறுதியளித்தனர். (ஐ-5-10-றி)

# ஆள்கள் இல்லாத வீடுகளில் ஓடுகள், சீற்றுகள் அபகரிப்பு!

வலி.கிழக்கு,செப்.14

அண்மையில் பொதுமக்கள் வெளியேறிய இடங்களில் உள்ள வீடுகளில் ஓடுகள், தளபாடங்கள் இனந்தெரியாத நபர்களால் சூறையா டப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கச்சேரி நல்லூர் மூத்த விநா யகர் வீதியில் உள்ள பல வீடுக ளில் தொடராக இதுபோன்ற சம்ப வங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

கடந்தவாரம் நல்லூர் மூத்த விநாயகர் வீதியில் வசிக்கும் எஸ். கோபாலபிள்ளை என்பவரது வீட்டில் 300க்கும் மேற்பட்ட ஓடுகளும் கூரைச் சீற்றுக்களும் அபகரிக்கப்பட்டுள் ளன.

இதேவேளை -

நாயன்மார்கட்டைச் சேர்ந்த அ. உலகேஸ்வரி என்பவரது வீட்டில் தளபாடங்கள், தையல் மிஷின் போன்றவையும் திருடப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து இப்பகுதி யில் குடியிருந்தோர் தமது வீடுகளில் எஞ்சியுள்ள வீட்டுக் கூரைகளையும் மரங்களையும்கழற்றிப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ-180)

### நாளை

ஆவணி 30

வெள்ளிக்கிழமை

*திதி:* துதியை

பின்னிரவு 1.48 வரை.

*நட்சத்திரம்:* உத்தரட்டாதி

பிற்பகல் 2.09 வரை.

*சுபநேரம்:* 6.03 - 7.33

*ராகுகாலம்:* 10.33 - 12.03

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கலையும் காதல் போன் றது. முதலில அழகு, திறமை, சிறப்பு எல்லாவற்றையும் தேடும். பிறகு பழகி உண்மை உணர்ந்த பிறகு, அன்பு ஒன்று இருந்தாலும் போதும் என்ற மனம் வந்துவிடும்.

- மு.வ

# இலவசக் கல்வியை சீர்குலைக்க அனுமதியேன்!

## கல்வி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,செப்.14

இலவசக் கல்வியைச் சீர் குலைக்கும் எந்தத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதை நான் ஒருபோதும் அனுமதிக்கப் போவ தில்லை.

டி.எஸ்.சேனநாயக்க வித்தியா லயத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரை யாற்றிய கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரன இவ் வாறு தெரிவித்தார்.

உலகவங்கியின் ஆலோசனை யின் பேரில் இலவசக் கல்வியைப் படிப்படியாகக் குறைக்க அரசு திட்ட மிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் முகமாக அமைச்சர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

நான் கல்வி அமைச்சராக இருக் கும் வரை இத்தகைய திட்டம் ஒன் றுக்குச் சம்மதிக்கமாட்டேன். 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை பெருமளவு சிறந்த பலாபலன்கள் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. முன்னர் வருடம் ஒன் றுக்கு எண்ணாயிரத்து 500 மாண வர்களே பல்கலைக்கழகங்களுக் குத் தெரிவு செய்யப்பட்டனர். தற் போது வருடம் ஒன்றுக்கு 12 ஆயி ரத்து 500 மாணவர்கள் தெரிவு செய் யப்படுகிறார்கள்-என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார். (ஐ-8)

## வாராந்த நிகழ்வு

கொழும்புத்துறை,செப்.14

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதி யான ஆச்சிரம மண்டபத்தில் நடை பெறும் வாராந்த நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமாகி நடை பெறும்.

இந்நிகழ்விற்கான அறிமுகவுரை யைப் பேரவையின் தலைவர் தொழிலதிபர்.சி. நாகலிங்கம் நிகழ்த் துவார்.

மறவனூர் ரி.எம்.வாசகனின் 'பக் திப்பாடல்' பக்கவாத்திய சகிதம் நடைபெறும்.

நண்பகல் 12.30 மணிக்கு அடி யார்களுக்கு அன்னதானம் வழங்கப் படும். (ஐ-30-173)

# சாயி சிந்தனை



தெய்வத்தை நாடிச்செல்லும் பாதையில் மனிதன் சிறிது சிறிதாக ஆசைகளைக் குறைத்துக் கொண்டே வரவேண்டும். ஏனெ னில் ஆசைகளே அவனது இன்னல்களுக்கு முக்கிய காரண மாகும். ஆசையில்லாமல் மனிதன் உயிர்வாழ்வது கடினம் என்பது உண்மையே. ஆயினும் அவை ஒரு வரையறைக்குள் இருத்தல் வேண்டும். ஆசையை அடக்கினால்தான் ஆனந்தம் பெற இயலும்.

புலன்களில் முக்கியமானவை, கண்ணும் நாவுமே. இவை களின் முக்கியத்துவத்தைக் கருதியே அவைகளின் செயலாற் றலைக் கட்டுப்படுத்த வழிமுறைகளை இறைவன் அளித் துள்ளார். இறைவன் மனிதனிடம் கூறுவார், "ஏ மூட மனி தனே! உன் கண்களையும் வாயையும் மூடுவதற்கு இயற்கை யான வசதியை அளித்துள்ளேன்" காணக்கூடாத காட்சியைத் தவிர்க்க வேண்டுமென்றால் கண்களை எளிதாகவே மூடிக் கொண்டு விடலாம். காதுகளுக்கும் மூக்குக்கும் அம்மாதிரி வசதி இல்லை. நாக்கைக் கட்டுப்படுத்தி மூடிவைக்க உதடு களை மூடினால் போதும். ஆகவே, கண்களால் காண்பவை களிலும் நாவினால் பேசுவதிலும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடி யுங்கள். இவையிரண்டும் கட்டுங்கடங்கி விட்டால் மீதி எல் லாப் புலன்களுமே தாமே அடங்கி விடும். கண்டதே காட்சி என எல்லாவற்றையும் கட்டுப்பாடின்றி காணும் கண்களும் எவ்வித வரையறையுமின்றி இஷ்டப்படி பேசும் நாவும் இருக் கும் வரையில் ஒருவனுக்கு வாழ்க்கை விபத்தாகவே முடியும். ஆகவே கண்களால் பார்க்கக் கூடியவைகளையே பார்க்கப் பழக வேண்டும். நல்லவைகளையே கண்டு, நல்லதையே பேச வேண்டும்.

(ஆதாரம்:- சனாதன சாரதி)

## தென்மராட்சிப் போரின் போது

# மக்கள் வாழ்ந்த பிரதேசங்களுக்கு நேரில் சென்று பணியாற்ற முடியாது பாதுகாப்புக் கெடுபிடிகள் தடுத்தன!

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கவலை

இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கும் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினருக்கும் இடையிலான மோதல்கள் மார்ச் மாத இறுதியில் மீண்டும் ஆரம்பமானதைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் மோசமான மனிதாபிமானப் பிரச்சினைகள் தலைதூக்கின.

கடும்யுத்தத்தின் விளைவாக ஆயிரக்கணக்கான மக்கள் தமது



**போரின் பல கொடும் விளைவுகளில் ஒன்று. ஒரு காலை இழந்து செயற்கைக் காலுடன் எழுந்து நிற்கும் ஒருவர்.**

இருப்பிடங்களிலிருந்து வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். குடாநாட்டு மக்களின் அடிப்படை வாழ்க்கை நிலைமைகள் திடீரெனச் சீர்குலைந்தன. அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம், சுகாதார வசதிகள், பொருளாதார நடவடிக்கைகள், மின்விநியோகம், தொலைத்தொடர்பு முதலிய யாவுமே பாதிக்கப்பட்டன.

"உக்கிரமான யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதி முழுவதும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் (ஐ.சி.ஆர்.சி) குடாநாட்டில் தங்கியிருந்து சேவையாற்றினர்.இது குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையினர் வழங்கிய மனப்பூர்வ ஒத்துழைப்பின் பயனாக, இடம்பெயர்ந்தோருக்கு வேண்டிய உதவிகளை வழங்கவும், பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் தேவைகளைக் கவனிக்கவும் எம்மால் முடிந்தது" என்கிறார் யாழ்ப்பாணத்திலுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி.)உப பிரதிநிதிக் குழுவின தலைவர் றொப் ட்ரோயென். யுத்தத்தின் விளைவாக சுமார் 160,000 பேர் தமதுவீடுகளிலிருந்து வெளியேறியுள்ளனர். இவர்களில் அனேகமானோர் உறவினர்களுடனும் நண்பர்களுடனும் தங்கியுள்ளனர். யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் தெரிவிக்கும் புள்ளிவிபரத்தின் படி, இடம்பெயர்ந்த 17,000 பேருக்கு வலிகாமத்திலும், பருத்தித்துறையிலுமுள்ள 136 நலன்புரி நிலையங்களில்புகலிடம் அளிக்கப்பட்டது. இவர்களுக்கான உதவிகள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினதும் ஏனைய மனிதாபிமானச் சேவை அமைப்புக்களினதும் ஒத்துழைப்புடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி.)வினால் வழங்கப்பட்டன.

இடம் பெயர்ந்தோர் நலன் புரி நிலையங்கள் 9 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமைந்துள்ளன.அவற்றில் தங்கியிருப்போரின் எண்ணிக்கை அதிகரித்ததைத் தொடர்ந்து மனிதாபிமான சேவை அமைப்புக்கள் அரசாங்க அதிபரின் ஆலோசனையுடன் தமது பணிகளை பிரதேச அடிப்படையிலும் நிபுணத்துவ வசதி அடிப்படையிலும் வகுத்துச் செயலாற்றத் தொடங்கின. யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் மனிதாபிமான சேவை அமைப்புக்களுள் யு.என்.எச்.சி.ஆர்., யு.என்.டி.பி., எம்.எஸ்.எவ்., எஸ்.சி.எவ்., ஜீ.ரி.இசட்., யுனிசெப்.,கெயார்., போரூட்., ஏ.சி.எவ் எனபனவும் அடங்கும்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி) - இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் உதவித் திட்டத்தின் கீழ் ஏப்ரல் - ஜுன் காலப்பகுதியில் நலன்புரி நிலையங்களில் உள்ள 9,000 பேருக்கு பிளாஸ்டிக் போர்வைகள், விளக்குகள், பாய்கள், வாளிகள், சமையல் பாத்திரங்கள், சவர்க்காரம், பற்பசை முதலிய பொருள்கள் வழங்கப்பட்டன. ஐ.சி. ஆர்.சியின் ஆதரவுடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் மருத்துவச் சேவை அணியினர் 63 இடங்களில் சிகிச்சை முகாம்களை நடத்தி இடம்பெயர்ந்த 5,000 பேருக்கு மருத்துவச் சிகிச்சைகளை வழங்கினர். மனிதாபிமான சேவை அமைப்புக்களினால் நலன்புரி நிலையங்களில் மேற்கொள்ளப்படும் நீர் விநியோகம், கழிவுப்பொருள் அகற்றல், நுளம்புக் கட்டுப்பாடு போன்ற பணிகளை ஒருங்கிணைத்து வழி நடத்துவதில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் (ஐ.சி.ஆர்.சி.) நீர்/ சுகாதாரப் பிரதிநிதி முக்கிய பங்கினை வகிக்கிறார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி.)வினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட "யாவா கல்ஃப்" கப்பல் திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான வாராந்த சேவைகளைத் தொடர்ந்து நடத்தியது. ஏப்ரல் மாதத்துக்கும் ஜூன் மாதத்துக்கும் இடையே இக்கப்பலில் 354 நோயாளிகளும் பயணத்துக்காக நீண்ட காலம் காத்து நின்ற 229 பேரும் 20 மருத்துவ மாணவர்களும் மனிதாபிமான அமைப்புக்களைச் சேர்ந்த 251 பேரும் ஏற்றிச் செல்லப்பட்டனர். அத்துடன் அரச வைத்தியசாலைகளுக்கான மருந்து வகைகள், தபால் பொதிகள், மக்களுக்கான நிவாரணப் பொருள்கள் என்ற வகையில் 217 மெட்ரிக் தொன் பொருள்களும் ஏற்றிச் செல்லப்பட்டன. தற்போதைய போர் நிலைமை காரணமாக, இக்கப்பலுக்கான யாழ். குடாநாட்டுத் துறைமுகம் காங்கேசன் துறையிலிருந்து பருத்தித் துறைக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

யுத்தத்தின் விளைவாக ஆயிரக்கணக்கான குடிமக்கள் போர் வலயங்களில் இருந்து வெளியேறி அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள குடாநாட்டுப் பிரதேசங்களுக்கு அல்லது எல்.ரி.ரி.ஈ. கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப்பிரதேசங்களுக்குச் சென்றனர். தொலைபேசிச் சேவை போன்ற தொடர்பு வழிகள் யாவும் சீர்குலைந்ததால், இவ்வாறு இடம் பெயர்ந்த மக்கள் தமது உறவினர்களுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இந்த வேளையில்



**யாழ்.நோயாளி ஒருவர் கப்பலுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்.**

இலங்கை தபால் அதிகார சபையின் சார்பில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி.) மேற்கொள்ளும் தபால் விநியோகச் சேவை இந்த மக்களுக்குப் பேருதவியாக அமைந்தது. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி.) சுமார் 840 சுருக்கச் செய்திகளைக் கையேற்று, அதன் வானொலித் தொடர்பு வலையமைப்பின் ஊடாக அனுப்பியது. வன்னியில் உள்ளவர்களுக்கு 117 செய்திகளும் நாட்டின் தென்பகுதியில் அல்லது வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கு 669 செய்திகளும் தேசிய செஞ்சிலுவைச் சங்க வலையமைப்பின் ஊடாக விநியோகிக்கப்பட்டன.

செஞ்சிலுவைச்சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி.) இந்தக்காலப்பகுதி முழுவதிலும் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் சர்வதேச மனிதாபிமானச் சட்டவிதிகளை அனுசரித்து நடக்கும்படி வேண்டுகோள் விடுத்து வந்தது."எனினும், நாம் இக் காலப்பகுதியில் எதிர்நோக்கிய ஒரு பின்னடைவு யாதெனில் உக்கிரமான யுத்தம் இடம்பெற்ற வலயங்களுக்கு அருகே பெருமளவு மக்கள் வசித்த விசாலமான பிரதேசங்களுக்குச் சென்று பணியாற்றப் பாதுகாப்புக் கெடுபிடிகள் தடையாக இருந்தமையாகும். உதாரணமாக தென்மராட்சிப் பகுதிக்குச் சென்று மக்களின் தேவைகளை மதிப்பீடு செய்ய நாம் எடுத்த முயற்சிகள் எதுவுமே பயனளிக்கவில்லை" என்றார் உப பிரதிநிதிக் குழுவின் தலைவர் றொப் ட்ரோயென்.

போரின் விளைவாக யாழ்ப்பாணத்திலுள்ள ஜெய்ப்பூர் செயற்கைக் கால் வேலைத்தலம் முதலில் மூடப்பட்ட போதிலும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி.)வின் உதவியுடன் தற்காலிகமாகத் தொண்டைமானாறு... 

*(நன்றி: ஐ.சி.ஆர்.சி. - செய்தி மடல்).* ✳

# ஆசிரியர் பதவி உயர்வுக்கு வயது நிபந்தனை; பெரும் எண்ணிக்கையானோரைப் பாதிக்கும்

## புதுமையான விதிமுறை மனித உரிமை மீறலாகும்

இலங்கை ஆசிரியர் சேவையின் புதிய பதவி உயர்வு நடவடிக்கை முறைகள் அமுல்படுத்தலில் வயது நிபந்தனை ஆசிரியர்களில் ஒரு பகுதியினரை விசனத்திற்கு உள்ளாக்கியுள்ளது. "ஆசிரியர் சேவையில் வகுப்பு I பதவி உயர்வு பெறுவதற்கு இந்த வருடம் டிசம்பர்மாதம் 31ஆம்திகதி 50வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்" என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

ஐம்பது வயது பூர்த்தி நிபந்தனை சேவை மூப்பும் உயர் கல்வித் தகைமையும் உள்ள கணிசமான அளவு ஆசிரியர்களை ஆசிரியர் சேவையின் வகுப்பு I பதவி உயர்வு பெற முடியாமல் செய்திருப்பதோடு, ஆசிரியர் சேவை வகுப்பு 2-I தரத்தில் பல வருடங்களாக தேக்க நிலையில் இடைநிறுத்தியுள்ளது.

50 வயதை பூர்த்தி செய்தோர் ஆசிரியர் சேவை 2-II தரத்தில் இருந்தும் மற்றும் 2-Iஇல் உச்சச் சம்பளம் பெறாத நிலையில் இருந்தும் திடீரென வகுப்பு Iக்கு பதவி உயர்த்தப்பட்டு (படி நிலையாக இல்லாமல் இரட்டைப் பதவி உயர்வு பெற்று) அதிகரித்த சம்பளம் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை 1994 ஆம் ஆண்டு ஒக்ரோபர் ஆறாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஒக்ரோபர் ஆறாம் திகதி ஆசிரியர் தினத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆசிரியர் சேவை 5 பிரிவுகளைக் கொண்டதாக வகைப்படுத்தப்பட்டது. அவை யாவன.

★வகுப்பு I, ★ வகுப்பு 2-I தரம், ★வகுப்பு 2-II தரம், ★ வகுப்பு 3-I தரம், ★ வகுப்பு 3 - II தரம்.

ஆசிரியர் சேவையின் வகுப்பு I தவிர ஏனைய நான்கு தரங்களுக்கும் சேவை மூப்பு, கல்வித்தகைமை, தொழிற்றகைமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு 1995ஆம் ஆண்டு ஆசிரியர்கள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டனர்.

### சம்பள உயர்வு இல்லை

எதிர்காலத்தில் ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கமைய ஆசிரியர்கள் இருக்கும் தரங்களில் இருந்து அடுத்த தரங்களுக்கு பதவி உயர்த்தப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட பிரகாரம் பதவி உயர்த்துவதற்கான சேவைக்கால பயிற்சி, தொழில் சார் மீளாய்வு, மீள்பயிற்சி பரீட்சைகள் என்பன முறைப்படி நடத்தப்படவில்லை. இதனால் ஒவ்வொரு தரத்திலும் ஐந்து வருடங்களாக பதவி உயர்வு பெறாமல் தேங்கி நிற்கின்றனர். 1995ஆம் ஆண்டு உள்ளீர்ப்பின் போது உச்சச் சம்பளம் பெற்றவர்கள் வருடாந்த சம்பள உயர்ச்சி இல்லாத நிலையில் கடமை புரிகின்றனர்.

ஆசிரியர் தொழிற் சங்கங்கள் கல்வி அமைச்சுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்து நாடாளுமன்றத் தேர்தல் ஆண்டாகிய இந்த வருடத்தில் ஆசிரியர் சேவையின் பதவி உயர்வு தொடர்பான புதிய நடைமுறை அமுல்படுத்தப்படுகின்றது.

விசேட ஏற்பாட்டின் படி பதவி உயர்வுக்கு சேவைக்காலப் பயிற்சி, தொழில்சார் மீளாய்வு, மீள்பயிற்சி பரீட்சை என்பன நீக்கப்பட்டு சேவைக்காலத்துக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு பெறும் புள்ளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன. இந்த விசேட ஏற்பாடு 31-12-2000 வரை மட்டும் தான் என அறிவிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### பதவி உயர்வுக்கான புள்ளிகள்

○ ஆசிரியர் சேவையில் தராதரப் பத்திரமற்ற ஆசிரிய நியமனம் பெற்றவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியராக நியமனம் பெறும் வரை உள்ள சேவைக் காலத்திற்கு ஒரு வருட சேவைக்கு, 1/2 புள்ளி.

○ பயிற்றப்பட்ட பின்பு வருடம் ஒன்றுக்கு - 1 புள்ளி

○ பட்டதாரி ஆசிரியர் சேவைக்காலம் வருடம் ஒன்றுக்கு - 1 புள்ளி

★ பட்டப்பின் கல்வி டிப்ளோமா (தொழிற்றகைமை) மேலதிகமாக - 1 புள்ளி

புள்ளித்திட்ட அடிப்படையில் 5 புள்ளிகள் 3 - I பதவி உயர்வுக்கும், 10 புள்ளிகள் 2 - II பதவி உயர்வுக்கும், 15 புள்ளிகள் 2 - I பதவி உயர்வுக்கும் ஏற்றுக் கொள்ளப்படுவதோடு ஆசிரியர் சேவை வகுப்பு - Iக்கு 20 புள்ளிகளுக்கு மேலும் 50 வயதும் பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.

கல்வி முதுமாணி, கல்வித்தத்துவ முதுமாணி, கலை முதுமாணி(கல்வி) ஆகிய பட்டங்களைப் பெற்றவர்கள் வகுப்பு I க்குச் செல்வதற்கு வயதுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

### ஆசிரியர் சேவையின் சம்பளத்திட்டம்:-

3-I சம்பளம்:- 55,140 - 9 x 1320 - 8 x 1560 - 79,500

2-II சம்பளம்:- 67,320 - 12 x 2460 - 96,840

2-I சம்பளம் :- 90,420 - 7 x 3000 - 111,420

வகுப்பு I சம்பளம்:- 117,960 - 10 x 5520 - 173,160

வகுப்பு I க்கு ஆரம்பம் மாதத்திற்கு 9830 ரூபாவும் வருடாந்தச் சம்பள உயர்ச்சி 460 ரூபாவும் உச்சச் சம்பளம் 14,430 ரூபாவும் கொண்டது.

**ஞான அந்தவன்**

வகுப்பு - 2-I தரத்திற்கு உச்சச் சம்பளம் மாதம் 9285ரூபா 1950ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதிக்குப் பின் பிறந்த எவரும் 50 வயதுப் பூர்த்தி நிபந்தனையால் பதவி உயர்வு பெறமுடியாமல் இருக்கும் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் 1995ம் ஆண்டுக்குப் பின்பு வருடாந்தச் சம்பள உயர்ச்சியும் இல்லாமல் உச்ச சம்பளமாக 9285ரூபா பெறுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வயது - சேவை மூப்பு ஒப்பீடு

1976ஆம் ஆண்டு நியமனம் பெற்ற இருவரில் (X,Y) நியமனம் பெறும் போது X இன் வயது 25; Yஇன் வயது 30. இருவரும் ஒரே கல்வித்தகைமையும் ஒரேயளவு கால சேவையும் கொண்டவர்களாக இருந்த போதிலும் இருவரில் ஒருவருக்குப் பதவி உயர்வு கிடையாது.

Yக்கு - 30 + 24 - 54 வயது

Xக்கு - 25 + 24 - 49 வயது

வயதால் பதவி உயர்வு பெற்ற "Y" ஆசிரியர் சேவையில் அதி உயர் தரமான வகுப்பு I க்கு உரிய சம்பளத்தையும் ஏனைய பதவி உயர்வுகளையும் பெறும் அதே நேரம், வயதுக் கட்டுப்பாட்டால் பதவி உயர்வு பெறமுடியாத X ஆசிரியர் சேவை வகுப்பு 2-I தரத்திற்குரிய குறைந்த ஊதியம் பெறுவது மனஉளைச்சலும் உளவியல் தாக்கமும் கொண்டது என்பது புரியாத ஒன்றல்ல.

கல்வித் தகைமை சேவை மூப்பு என்பவற்றுக்கு அப்பால் வயதைக் கருத்தில் கொண்டு சம்பள அதிகரிப்பும் பதவி

(10 பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் இடம்பெயர்வுகள் மத்தியில் தேர்தல் நடத்துவது ஏற்கக் கூடியதல்ல

## ஐக்கிய சோஷலிசக் கட்சி கூறுகிறது

கொழும்பு,செப்.14

குடாநாட்டில் தற்போதும் இடம்பெற்று வரும் இடம்பெயர்வுகள் மத்தியில் இங்கே தேர்தல் நடத்துவது நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும். ஆகவே யுத்தத்தை நிறுத்திவிட்டு சுமுக நிலை ஒன்று தோன்றிய பின்னர் யாழ். மாவட்டத்தில் நியாயமான தேர்தல் ஒன்றை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விடுத்து அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் நடத்தும் தேர்தலை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது நடைபெறும் தேர்தல் அலுவல்கள் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் விரோதமாக உள்ளன. அவை நியாயமான தேர்தல் ஒன்றுக்கு வழி வகுக்கும் என்று கூற முடியாது.

பொதுவாக யுத்தமொன்று நடைபெறும் பகுதியில் தேர்தல் ஒன்று சாத்தியப்படாது. அதேபோல் நிம்மதியாக வாழ வழி கிடைத்தால் போதும் என்ற நிலையிலுள்ள யாழ்ப்பாண மக்கள் தேர்தலையும் படை நடவடிக்கைகளையும் வெறுக்கின்றனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனிப்பட்ட அரசியல் இலாபம் கருதி சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திசை திருப்பும் வகையில் யாழ். மாவட்டத்தில் சுமுக நிலை உள்ளதாகக் காட்டுவதற்கு பொதுத் தேர்தலையும் -

பெரும் பான்மையினரின் சீற்றத்தைத் தணிக்கப் பாரிய படை நடவடிக்கையையும் - சமகாலத்தில் நடத்துகின்றது.

அரசாங்கத்தின் நோக்கத்தை ஈடேற்றிக் கொள்வதற்காக, மக்களைக் கேடயமாக்கிச் சர்வதேச சமூகத்தின் முன் ஜனநாயகம் நிலவுவதாகக் காட்டிக்கொள்வதற்கு, அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாழ்ப்பாணப் பொதுமக்களை செய்வதறியாது திணற வைக்கிறது.

தேர்தல் நடவடிக்கைக்கும், படையினரின் நடவடிக்கைக்கும் மத்தியில் மக்களைச் சிக்கித் தவிக்க வைக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஐக்கிய சோசலிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6-8)

### வாக்காளர் அட்டைகள்

கொழும்பு,செப்.14

அச்சிடப்பட்ட வாக்காளர் அட்டைகள் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு வருவதாக அரசாங்க அச்சகத் தலைவர் தெரிவித்தார்.

தேவையான ஒரு கோடி 30 லட்சம் வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்கு 90 லட்சம் ரூபா செலவில் விசேட காகிதாதிகள் இறக்குமதி செய்யப்பட்டன என்றும் -

எட்டு மாவட்டங்களுக்குப் போதுமான வாக்காளர் அட்டைகளே தற்பொழுது அச்சிடப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

# சுதந்திரமான தேர்தலுக்காக எவருடனும் இணையத் தயார்!



கொழும்பு,செப்.14

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு எந்த ஒரு கட்சியுடனோ, அமைப்புடனோ அல்லது நபருடனோ இணைந்து செயற்பட ஐ.தே. கட்சி தயார்.

இவ்வாறு, மாவனல்லையில் இடம்பெற்ற ஐ.தே. கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் நாட்டில் யுத்தம் காரணமாக பெருமளவில் செலவு ஏற்பட்டுள்ளதால் ஏனைய பிரச்சினைகளைத் தீர்க்கமுடியவில்லை என்று கூறுவது ஒரு உறுதியான அரசாங்கத்தின் தலைமைத்துவத்துக்கு உகந்ததல்ல.

நாட்டில் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கத் திட்டம் ஒன்றை ஐ.தே.கட்சி வகுத்துள்ளது. அதன்படி அபிவிருத்தி வங்கி ஒன்று அமைக்கப்பட்டு தேசிய முதலீட்டை அதிகரிக்கச் செய்து தொழிற்சாலைகள் அதிகளவில் நிறுவப்படும் என்றார். (இ-8)




### அறிக்கைகளை சேகரிக்க நடவடிக்கை

கொழும்பு,செப்.14

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களால் வெளியிடப்படும் சகலவிதமான அறிக்கைகளையும் தொண்டர் நிறுவனம் மூலம் சேகரிக்க தேசிய சுவடிக்கூடத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி - இவ்வருடப் பொதுத் தேர்தலுக்காக அரசியல் கட்சிகளும், சுயேச்சைக்குழுக்களும் பிரசுரிக்கும் கொள்கை விளக்கங்கள், அறிவித்தல்கள், சுவரொட்டிகள், புத்தகங்கள், படங்கள் அனைத்தினதும் பிரதிகளையும் அவை பிரசுரிக்கப்பட்டு முப்பது நாள்களுள் தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-8)

# 204 தேர்தல் வன்செயல்கள் ஒரு வார காலத்தில் பதிவு

வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு ஒருவார காலத்தில் 204 தேர்தல் வன்செயல்கள் குறித்து முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

குறுகிய காலத்துக்குள் அதிக வன்செயல்கள் இடம்பெற்றுள்ளமை இதுவே முதல் தடவை எனவும் -

பெரும்பாலான சம்பவங்கள் வடமேல் மாகாணத்தில் நடைபெற்றுள்ளன என்றும் -

மாவட்ட அடிப்படையில் நோக்குமிடத்து புத்தளத்தில் அதிக தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் - அந்த அமைப்புத் தெரிவித்தது. (இ-8)

# வேட்பாளர்களுக்கு விசேட அ. அட்டை

கொழும்பு,செப்.14

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் அரசியல் கட்சி வேட்பாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கு பாதுகாப்புக் காரணங்கள் கருதி விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களினதும் பாதுகாப்புத் தொடர்பாக நேற்றுமுன்தினம் காலை மட்டக்களப்பில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அரசஅதிபர் இ.மோனகுருசாமி உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஐ.தே கட்சி, ஈ.பி.டி.பி.,ரெலோ, பிரஜைகள் முன்னணி மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றின் வேட்பாளர்களுடம் கலந்து கொண்டனர். (இ-8)

# வாகனங்கள் சோதனையிடப்படும்

சட்ட விரோத ஆயுதங்கள் இருக்கின்றனவா என்பதை, கண்டறிவதற்காக சகல ஆள்களையும் வாகனங்களையும் சோதனை செய்யுமாறு தேர்தல் கடமையில் ஈடுபடும் பொலீஸாருக்கு உத்தரவு இடப்பட்டுள்ளதாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் கொட்டகெதெனிய தெரிவித்தார்.

அமைச்சர்கள், முன்னாள் எம்.பிக்களின் மெய்க்காப்பாளர்கள் தமக்குரிய சீருடைகளை அணிந்திருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

### வேட்பாளரின் வீட்டின் மீது கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம்,செப்.14

மத்திய மாகாண சபை அமைச்சரும் கண்டி மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளருமான மகிந்தானந்த அளுத்கமகேயினது கண்டியிலுள்ள வீடு கடந்த ஞாயிறு காலை கிரனேட் வீச்சுக்கு இலக்கானது.

வாகனமொன்றில் வந்தவர்களால் வீசப்பட்ட கிரனேட்டினால் ஆள்கள் எவரும் காயமடையவில்லை. வீடு சிறு சேதத்திற்குள்ளானது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத்தின் உத்தரவின் பேரில் இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடைபெறுகின்றன. அந்த இடத்தைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவரை சந்தேகத்தின் பேரில் கடுகண்ணாவ பொலீஸார் விசாரணைக்காக கைது செய்துள்ளனர். (இ-ரி)

# அம்பாறையில் கூட்டணியின் வேட்பு மனுவுக்கு எதிர்ப்பு

## தமிழர் மகாசபை நீதிமன்றில் மனுத் தாக்கல்

கொழும்பு,செப்.14

அம்பாறை தேர்தல் மாவட்டத்துக்கான தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் நியமனப்பத்திரம் நிராகரிக்கப்படவேண்டும் என்று, அந்த மாவட்டத்தின் சுயேச்சைக் குழுவின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் தமிழர் மகாசபையைச் சேர்ந்த ரி.கோபாலகிருஷ்ணன் மேல் முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் நியமன அட்டவணையில் அந்தக் கட்சியின் பொதுச் செயலரின் கையெழுத்து சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்படவில்லையென கோபாலகிருஷ்ணன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் அறிவித்த போதிலும் அவர் தனது எழுத்து மூலமான ஆட்சேபனையை நிராகரித்து விட்டார் என்றும் கோபாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது குறித்து தேர்தல் ஆணையாளரிடமும் தாம் முறையிட உள்ளதாக அவர் மேலும் கூறினார். (இ-8-14)

# நாடு முழுவதும் ஐ.தே.கவுக்கு ஆதரவு இருந்து வருகிறது

## அனுரா பண்டாரநாயக்க கூறுகிறார்



கொழும்பு,செப்.14

"மக்கள் மத்தியில் ஒரு விழிப்பு நிலை தோன்றியிருக்கிறது. நாடு முழுவதிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு குறிப்பிடத்தக்களவு ஆதரவு காணப்படுகிறது"

இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க கண்டியில் செய்தியாளர்களிடம் கூறினார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும் நாட்டிற்கு மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடியதுமான அரசமைப்பு சட்டநகலை விழிப்புடனிருந்து எதிர்த்தமைக்காக நான் மகாநாயக்கர்களுக்கு கடமைப்பட்டுள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் பற்றிக் குறிப்பிட்ட அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப கர்த்தாக்களான கே.பி. இரத்நாயக்காவும், லக்ஸ்மன் ஜெயக்கொடியும் தேர்தலிலிருந்து ஒதுக்கப்பட்டு விட்டார்கள். ஆனால் எவருமே நம்ப முடியாத வகையில் வரதராஜப் பெருமாளின் பெயர் தேசியப் பட்டியலில இடம்பெற்றுள்ளது என்றார்.

# வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கூடுதல் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள்

கொழும்பு,செப்.14

வடக்கு-கிழக்கில் கூடுதலாக வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த 'பெபரல்' அமைப்பு மற்றும் தேர்தல் முறைகேடுகளை கண்காணிப்பதற்கான அமைப்பு என்பன நடவடிக்கை எடுத்துள்ளன என்று பெபரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்ரிகோ தெரிவித்தார்.

பெபரல் அமைப்பு மூலம் தருவிக்கப்படும் 50 வெளிநாட்டு கண்காணிப்பாளர்களும் ஒக்ரோபர் 5ஆம் திகதியளவில் இலங்கை வரவுள்ளனர். இவர்கள் தேர்தல் முடிந்து 3 தினங்கள்வரை இலங்கையில் தங்கி இருந்து கண்காணிப்பில் ஈடுபடுவர்.

இதேவேளை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான அமைப்பு தருவிக்கும் 50 வெளிநாட்டு கண்காணிப்பாளர்களும் எதிர்வரும் 25ஆம் திகதிமுதல் இலங்கை வரவுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் கூடுதலான தேர்தல் மோசடிகள் நடைபெறும் என அஞ்சப்படுவதால் அங்கு கூடுதல் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த முடிவு செய்துள்ளோம் என அந்த அமைப்பின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான அமைப்பு தருவிக்கும் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களுள் 6பேர் வடக்கு-கிழக்கு பகுதிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். ஏற்கனவே உள்நாட்டு கண்காணிப்பாளர்கள் இருவர் யாழ்ப்பாணத்தில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் சொன்னார்.

வடக்கு-கிழக்கில் கண்காணிப்பில் ஈடுபடுவது குறித்தே தமது அமைப்பு கூடுதல் கவனம் செலுத்துகிறது எனவும் அவர் சொன்னார்.

பெபரல் அமைப்பு, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான அமைப்பு என்பன வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுடன் கூடுதலான உள்நாட்டு கண்காணிப்பாளர்களையும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுத்தவுள்ளன. அதேவேளை தேர்தல் செயலகம் சுமார் 60 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை வரவழைக்கவுள்ளது. (இ-6-ரி)

# கட்சிகளின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படும்

## தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை

கொழும்பு,செப்.14

எதிர்வரும் பொதுத் தேர்தலை அடுத்து வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களுக்கு, அவற்றை அவதானிக்கச் செல்லும் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணையாளர் மட்டுப்படுத்தியுள்ளார்.

இதன்படி, வாக்குகள் எண்ணப்படும் ஒரு நிலையத்துக்கு ஒரு அரசியல் கட்சி அல்லது ஒரு சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த ஐந்து பிரதிநிதிகளே அனுமதிக்கப்படுவர்.

இம்முறை குறிப்பிட்ட சில மாவட்டங்களில் அதிக அளவிலான அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. ஆதலால் பிரதித் தேர்தல் ஆணையாளர் இது தொடர்பாக தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததை அடுத்து நேற்று முன்தினம் மாலை அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஆகியன கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் வைத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. (இ-8)


★ போரை நிறுத்துங்கள்!

★★ புலிகள் இயக்கத்துடன் பேசுங்கள்!!

★★★ தமிழ் இனத்தை தன்மானத்துடன் வாழவிடுங்கள்!!!

சட்டத்தரணி ந.சிறீகாந்தா தலைமையில்

போட்டியிடும் சுயேச்சைக்குழு - இல - 6



X

(7820)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,செப்.14

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 13ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 512/144573/A | 512/144573/B |
| 512/149987/A | 512/150090/A |
| 512/153055/A | 512/153055/B |
| 512/154285/A | 512/154285/B |
| 512/154285/C | 512/154285/D |
| 512/154285/E | 512/154285/F |
| 512/155473/C | 512/156643/C |
| 512/159288/A | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 512/154088/A | |

### நல்லூர்

| | |
|---|---|
| 512/149839/A | 512/150262/A |
| 512/150262/B | 512/150269/A |
| 512/150269/B | 512/150269/C |
| 512/150269/D | 512/154158/A |
| 512/156206/A | 512/156206/B |
| 512/156239/A | 512/156240/A |
| 512/156240/B | 512/156240/C |
| 513/143949/A | 513/143949/B |
| 513/143949/C | 513/158689/A |
| 513/158689/B | 513/158734/A |
| 513/158834/A | 513/160479/A |
| 513/160669/B | 513/160669/C |
| 513/160669/D | 513/160671/A |
| 513/160747/A | 513/160747/B |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/156030/A | 513/156030/B |
| 513/156030/C | 513/156030/D |
| 513/156030/E | 513/158534/A |
| 513/158534/B | 513/158534/C |
| 513/158536/A | 513/158536/B |
| 513/158536/C | 513/158549/A |
| 513/158579/A | 513/158579/B |
| 513/158579/C | 513/158579/D |
| 513/158624/A | 513/158653/A |
| 513/158653/B | 513/158691/A |
| 513/158691/B | 513/158691/C |
| 513/158691/D | 513/160670/A |
| 513/160685/A | 513/160685/B |
| 513/160685/C | 513/160752/A |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/157912/A | 513/158565/A |
| 513/158565/B | 513/160476/A |
| 513/160477/A | 513/160477/B |
| 513/160477/C | 513/160477/D |
| 513/160496/A | 513/160496/B |
| 513/160697/A | 513/160697/B |

### உடுவில்

| | |
|---|---|
| 513/152523/A | 513/156023/A |
| 513/160559/A | 513/160617/A |
| 513/160618/A | 513/160652/A |
| 513/160655/A | 513/160655/B |
| 513/160814/A | 513/160814/B |
| 513/160933/A | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 512/150146/A | 512/150146/B |
| 512/150146/C | 512/150146/D |
| 512/150146/E | 512/152895/A |
| 512/152895/B | 512/152895/C |
| 512/154157/A | 512/154194/A |
| 512/154194/B | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 511/144935/A | 511/144935/B |
| 511/150832/A | 511/150832/B |
| 511/150832/C | 511/150832/D |
| 511/150832/E | 511/150832/F |
| 511/154361/A | 511/154361/B |
| 511/154361/C | 511/157112/A |
| 511/157113/A | 511/157232/A |
| 511/157285/A | 511/157285/B |
| 511/157406/A | 511/157406/B |
| 511/157452/A | 511/157452/B |
| 511/157486/A | 511/157511/A |
| 511/15832/G | 511/159523/A |
| 511/159526/A | 511/159526/B |
| 511/159526/C | 511/159526/D |
| 511/159852/A | 511/159852/B |
| 511/159879/A | 511/159879/B |

### நல்லூர்

| | |
|---|---|
| 511/136880/A | 511/136880/B |
| 511/144853/A | 511/144853/B |
| 511/145369/A | 511/148933/A |
| 511/156691/A | 511/156691/B |
| 511/156691/C | 511/156835/B |
| 511/156835A | 511/157269/A |
| 511/157505/A | 511/157505/B |
| 511/157509/A | 511/157509/B |
| 511/157509/C | 511/157520/A |
| 511/157520/B | 511/157520/C |
| 511/157602 | 511/157686/A |
| 511/157686/B | 512/150208/A |
| 512/154261/A | 512/156241/A |
| 512/156322/A | 512/156328/A |
| 512/156328/B | |

### பளை

| | |
|---|---|
| 511/156832/A | 511/156832/B |
| 511/156832/C | |

### உடுவில்

| | |
|---|---|
| 511/144983/A | 511/157213/A |
| 511/157213/B | 511/157213/C |
| 511/157230/A | 511/157230/B |
| 511/157281/A | 511/157282/A |
| 511/157617/A | 511/157617/B |
| 511/157617/C | 511/157620/A |

## வார இறுதியில் விசேட வகுப்புகள்

தென்மராட்சி,செப்.14

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து தோற்றவுள்ள மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் வார இறுதி நாள்கள் விசேட வகுப்புகளை நடத்த தென்மராட்சி கல்வி வலயத்தினரால் விசேட செயல்திட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் அமுல்படுத்தப் படவுள்ளது.

வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி கிழக்கு ஆகிய இடங்களில் தெரிவு செய்யப்பட்ட பின்வரும் பத்து நிலையங்களில் விசேட வகுப்புகள் நடாத்தப்படவுள்ளன, இடம்பெயர்வினால் வேறு வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களும் இதில் கலந்து கொள்ளலாமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட பத்துப் பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, வரணி ம.வி, நெல்லியடி மத்திய ம.வி, யார்க்கரு விநாயகர் வித்தி.,புலோலி மெதடிஸ்த மிஷன் த.க.பாடசாலை, கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, வயாவிளான் மத்திய கல்லூரி, சுதுமலை சிந்மயபாரதி வித்தி., சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம். (ஐ-117)

## பொதுக்கூட்டம்

வலி வடக்கு,செப்.14

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மேற்படி சங்கத் தலைவர் இ.வசந்தசேனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## காயத்திரி ஹோமம்

இணுவில் காயத்திரி பீடத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காயத்திரி ஹோமம் நடைபெறும்.

காயத்திரிபீட அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் தலைமையில் காயத்திரி ஹோமம் இடம் பெறும்.


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன

**சண்முகராஜேஸ்வரக்குருக்கள் சனாதனன்**

வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில், கோப்பாயைச் சேர்ந்த சண்முகராஜேஸ்வரக்குருக்கள் சனாதனன இன்று(14-09-2000) வியாழக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை கோப்பாய் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அம்மம்மா, சித்தப்பா, சித்திமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும வெள்ளெருவை விநாயகரின் அருட்கடாட்சத்துடன் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

அப்பா,
ச.சண்முகராஜேஸ்வரக்குருக்கள
*வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில்,*
*கோப்பாய்.* (78322)

## அறிவித்தல்

**வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்**

**ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி.**

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் (NAITA) அனுசரணையுடன் ஒருவருட கால முழுநேரப்பயிற்சி 02-10-2000 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆங்கிலத்தில் திறமைச்சித்தி யுடன் கணிதம், தமிழ் உட்பட க.பொ.த (சா/த) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்த-பாடசாலையை விட்டு விலகிய - 25 வயதிற்குட்பட்டவர்கள் 16-09-2000 (சனிக்கிழமை) பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு கல்விச் சான்றிதழ்களுடன் வந்து தோற்றலாம்.

**இறுதிப் பரீட்சை - 2000**

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் 01-10-2000ஆம திகதி வழங்கப்படும். சித்தியடைந்தவர்கள் அனைவரும் 16-09-2000 (சனிக்கிழமை) பிற்பகல் 4.30 மணிக்கு கழகத்தில் ஒன்று கூடவும். கழக செயற்குழு உறுப்பினர்களும் இதில் பங்குபற்றவும்.

– *செயலாளர்*

*வதிரி, கரவெட்டி.* (78341)


# பிச்சைக்கார வேடத்தில் புலிகள் ஊடுருவலா?

## கொழும்பில் திடீர் தேடுதல்

புலிகள் பிச்சைக்கார வேடத்தில் கொழும்பு நகருக்குள் நுழைந்துள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்து கொழும்பு மத்திய பிரிவு பொலீஸார் நேற்றுமுன்தினம் திடீர் தேடுதலொன்றை நடத்தியுள்ளனர்.

புறக்கோட்டை உட்பட கொழும்பு நகரப் பகுதியில் இடம் பெற்ற இந்தத் தேடுதலின்போது 50 பிச்சைக்காரர்கள் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிச்சைக்காரர்களால் பாதசாரிகளுக்கு ஏற்படும் வசதியீனங்களை தடுப்பதும் இந்த நடவடிக்கையின் ஒரு நோக்கமாகும்.

கைது செய்யப்படும் பிச்சைக்காரர்களை புனர்வாழ்வு நிலையங்களில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலீஸார் கூறினர். (ஐ)

## விபத்தில காயம்

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

பாதசாரியான நாகரட்ணம் சிவகுமார (வயது23) என்ற இளைஞனே காயமடைந்தவராவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## வானொலியில் அஞ்சல்

கொக்குவில மஞ்சவனப்பதி முருகன் கோவில் மஹோற்சவத்தின் இறுதித் திருவிழாவான பூங்காவனம் இன்று நடைபெறவுள்ளது.

பூங்காவனத் திருவிழா நிகழ்ச்சிகள் இன்று மாலை 5 மணிமுதல் 6 மணிவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையிலும் யாழ். சேவையிலும் அஞ்சல் செய்யப்பட உள்ளது. (ஐ)


என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்
(எசாயா - 40 : 1)

**கர்த்தரின் பரிசுத்த ஆசாரியர்களே! ஒன்று கூடுங்கள்**

**ஊழியர்களுக்கான பரிசுத்த உபவாச ஜெபம்**

இடம: **சீயோன் தேவாலயம்**
**24, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**
காலம: **நாளை 15-09-2000** (வெள்ளிக்கிழமை)
நேரம: முற்பகல் 9.30 - பிற்பகல் 1.30 (புதிய நேரம்)

* திருமணமானவர்கள் மனைவிமாரையும் அழைத்து வாருங்கள்.

சங்கீதம் 144: 14-15

*ஜெப இணைப்பாளர்:*
*இலங்கை சுவிசேஷக ஐக்கியத்துவம் (EASL)* (78333)

உ

## திருமண வாழ்த்து

| மணமகன் | மணமகள் |
|---|---|
| வேலணை | நெடுந்தீவு |
| திரு. திருமதி | திரு. திருமதி |
| கணேசபிள்ளை - மீனலோஜினி | சங்கரப்பிள்ளை - அபிராமிப்பிள்ளை |
| தம்பதிகளின் | தம்பதிகளின் |
| கனிஷ்ட புத்திரன் | கனிஷ்ட புத்திரி |
| **நற்குணராஜா** (ராஜா) | **தவமேகலா** (சாந்தி) |

இன்று (14-09-2000) வியாழக்கிழமை கொழும்பு தெகிவளை ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணுமூர்த்தி தேவஸ்தானத்தில் நடைபெறும திருமண விழாவில் இணையும் புதுமணத் தம்பதிகளை இறையருளால் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீவிஜயன் - திருச்செல்வி குடும்பத்தினர்
சுப்பிரமணியம் - தங்கேஸ்வரி குடும்பத்தினர்
சுதாகரன் - சந்திரகலா குடும்பத்தினர்
சத்தியவரதன் - மஞ்சுளா குடும்பத்தினர்
வரதபாஸ்கரன் - தயானி குடும்பத்தினர்
(78324)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் ஆவணித் திங்கள் 29 ஆம் நாள் இன்று (14-09-2000) வியாழக்கிழமை பகல் 1.45 மணி முதல் 2.30 மணி வரையுள்ள உத்திரட்டாதி நட்சத்திரமும், தனுலக்கினமும், மீன ராசியும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன் | எமது சிரேஷ்ட புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **கண்ணதாசன்** | **தர்சினி** |
| (கண்ணன்) | |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

சங்குவேலி பூவரசடி அருளானந்தப்பிள்ளையார் துணையுடன் மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திரு. திருமதி பொன்னையா திருபாலசிங்கம் | திரு. திருமதி லோட்டன் இராசகுமார் |
| *டச் றோட், சங்குவேலி வடக்கு,* | *சங்குவேலி வடக்கு,* |
| *மானிப்பாய்.* | *மானிப்பாய்.* |

*(இருவீட்டார் அழைப்பு)* (78359)

# தென்மராட்சி கல்விவலயத்தில் கருத்தரங்கும் செயலமர்வும்

தென்மராட்சி, செப். 14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7, 10 ஆகிய வகுப்புகளில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பில் பொருளியல்,, கணக்கீடு, வணிகக்கல்வி ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் எதிர்வரும் சனிக்கிழமையும் மறு நாள் ஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்திலும் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பில பொருளியல், கணக்கீடு, வணிகக்கல்வி ஆகிய பாடங்களுக்கான வினாத்தாள் மதிப்பீடு பற்றிய செயலமர்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், ஞாயிற்றுக்கிழமை மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியிலும் —

தரம் 7, 10 ஆகிய வகுப்புக்களில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் எதிர்வரும் சனிக்கிழமை நெல்லியடி ம. ம. வி.யிலும் ஞாயிற்றுக்கிழமை மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியிலும்- நடைபெறவுள்ளன,

ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் எதிர்வரும் சனிக்கிழமை இராமநாதன் கல்லூரியிலும் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி ம.ம.வியிலும் இடம்பெறவுள்ளன.

தரம் 7, 10 ஆகிய வகுப்புகளில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிப்போரில் கடந்த வருட இறுதியிலும் இவ் வருட முற்பகுதியிலும் நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் கலந்துகொண்டவர்களை இந்தக் கருத்தரங்குகளிலும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க-115)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப். 14

யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள அஞ்சணந்தாழ்வு புனித ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் ஆசிரும் இடம் பெறவுள்ளன. (ஐ-ரி)

* * *

யாழ்ப்பாணம், செப். 14

இலங்கைச் சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் ஏற்பாட்டில் ஊழியர்களுக்கான பரிசுத்த உபவாச ஜெபம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9. 30 மணி முதல் பிற்பகல் 1. 30 மணி வரை யாழ். சீயோன் தேவாலயத்தில் நடைபெறும். (ஐ-ரி)

## அறிவித்தல்

### வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

### கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 46 (1) இன் கீழான விசாரணை

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களால் 01-09-2000 ஆம் திகதிய கடிதம் மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் 01 - 05 - 1996 தொடக்கம் 30-06-2000 வரையான காலப்பகுதியின்·

1. கடன் விற்பனை
2. வருமதியாளர் அறவீடுகள்
3. திரும்பிய காசோலைகள்
4. சாராய விலை குறைப்பும், தரகு கொடுப்பனவும்
5. மூலதனச் செலவுகள்
6. முற்பணங்கள் வழங்கியமை
7. கொழும்பில் பொருள் கொள்வனவு
8. மூலப்பொருள் கொள்வனவிற்கும், உற்பத்திக்கும் (முடிவுப் பொருள்) இடையேயுள்ள தொடர்பு
9. கொழும்பிற்குச் சாராய ஏற்றுமதி
10. திருத்தம், பராமரிப்புச் செலவீனங்கள்
11. முறையற்ற கொடுப்பனவுகள்

ஆகியவை பற்றி கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 46 (1) இன் கீழான விசாரணை ஒன்றினை நடத்த விசாரணை உத்தியோகத்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளேன்.

மேற்படி விசாரணை தொடர்பாக மேற்கூறிய 1 தொடக்கம் 11 வரையிலானவற்றில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் அக்கறையுடைய எவரேனும் தகவல்களைத்தர விரும்பின் செப்ரெம்பர் மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் காலை 10 00 மணி முதல் மாலை 4.00 மணி வரை வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் மானிப்பாய் பிப்பிலி வீதியில் அமைந்துள்ள தலைமைப் பணிமனைக்குக் குறித்த திகதிகளில் என்முன் தோற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தபால் மூலம் தகவல் தர விரும்புபவர்கள் பதிவுத் தபால் மூலம் திரு. பொ. சிவலிங்கம் விசாரணை உத்தியோகத்தர், கூட்டுறவுப் பணிமனை, இலக்கம் 357, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 2000—10—30-ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பொ. சிவலிங்கம்
விசாரணை உத்தியோகத்தர்

திகதி: 2000—09—14

(சி/12910)

# தகவல் தொழில்நுட்ப கற்கைநெறி தெரிவுப் பரீட்சையில் தேறியவர்கள்

யாழ்ப்பாணம், செப். 14

கொழும்புப் பல்கலைக் கழகத்தின் தகவல் தொழில் நுட்பக்கற்கை நெறிக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இருந்து தோற்றிய 98 பேரில் 55பேர் சித்தியடைந்துள்ளனர்.

இலங்கை முழுவதும் இருந்து 7 ஆயிரம் பேர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றினர். அதில் ஐயாயிரத்து 197 பேர் சித்தியடைந்துள்ளனர்.

வன்னி மாவட்டத்திலிருந்து தோற்றிய 90 பேரில் 33 பேரும் —

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து தோற்றிய 150 பேரில் 26 பேரும் —சித்தியடைந்துள்ளனர்.

இந்தக் கற்கை நெறி தொடர்பான கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதற்காக தமது நிறுவனப் பிரதிநிதி ஒருவர் கொழும்பு சென்றுள்ளார் என்றும்—

அந்தக் கலந்துரையாடலில் இந்தக் கற்கைநெறி சம்பந்தமான விவரங்களைப் பெற்று தமது பிரதிநிதி யாழ்ப்பாணம் திரும்பிய பின்னர் கற்கைநெறி பற்றிய விவரங்கள் அறிவிக்கப்படும் என்றும் — ஐ. பி. எம். எஸ், நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:-

என். அரவிந்தன், பி. ஆசைமுத்து. பி. திவாகரன், எஸ். டி. கணேசன், எஸ். கணேசன், என். கீர்த்தன், வி. ஞானப்பிரகாசம், என். கஜன், ஜே. கலைச்செல்வன். எஸ். கலாதரன், ரி. கண்ணன், என். கண்ணன்.

பி. டி. கிஷியாந்தன், கே. லலிந்தினி, ஏ. எம். லெயல ர், வி. மதியுகன், ஜி. மதுரகணேசன், ஜி. மக்மிலன். எஸ். மயூரலிதாஸ், வி. முருகதாஸ், வி. மயில்வாகனம், ரி. நாகராஜா, ரி. நவநீதன், வி. நிருசன்.

கே. நித்தியானந்தம், எஸ். பத்மநாதன், பி. பத்மராஜ், எஸ். பொன்னம்பலம், என், ராஜேஷ்குமார், ஜி. இராமநாதன், கே. ரமேஷ், ஏ. எஸ். ரட்ணகுமார், எஸ். ரவீந்திரா, என். சச்சிதானந்தன், எஸ். சனானந்தன்.

எஸ் சஞ்சீவ், ஜி. சஷிகேஸ், என். சசசிதானந்தன், பி. செந்தில்குமாரன், ரி. சேரன், கே. சண்முகதாஸ், ரி. சிவபாதம், எஸ். சிவபிரசாந், பி. சிவசுதன், கே. சசிகரன்.

என். ஸ்ரீரங்கன், சுதாஸ், மோகன், யு. தேவபாலன், ஏ. தவராஜ். என். தவராஜ், கே தயானந்தன், பி. துரைராஜசிங்கம், எம். வேலுப்பிள்ளை, பி. ஏ. யோகராஜ், ஏ. ஏ. யோகேஸ்வரராஜா. (இ-3-7)

## பாலர் பாடசாலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 14

அராலி கிழக்கு கலைமகள் பாலர்பாடசாலையின் திறப்பு விழா இன்று பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றும் வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் ஈ. பி. டி. பி. அமைப்பின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான என். திரிலோகநாதன் பாடசாலையைத் திறந்துவைப்பார். (இ-3)

## இடம்பெயர்ந்தோர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப். 14

ஆனைக்கோட்டை ஜே— 133 இலக்கக் கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் இடம்பெயர்ந்தோருக்கான ரூபா இரண்டாயிரம் நிவாரணக் கொடுப்பனவு இன்றும் நாளையும் பிற்பகல் ஒரு மணிக்கு சங்கானை மக்கள் வங்கியில் வைத்து வழங்கப்படவிருக்கின்றது.

இந்தக் கொடுப்பனவைப் பெறுவோர் ஆனைக்கோட்டை கிராம அலுவலரைச் சந்தித்துக் கொடுப்பனவுத் திகதி, இலக்கம் போன்றவற்றைப் பெற்றுச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## பொருள்களை எடுத்துவர படையினர் தரப்பு அனுமதி

யாழ்ப்பாணம், செப். 14

அண்மைய யுத்தத்தின் போது கொழும்புத்துறை, அரியாலை ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள், இடப்பெயர்வின்போது விட்டுவந்த தமது பொருள்களை மீட்டு வருவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

அண்மையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவிடம் மேற்படி பகுதி வாழ் மக்கள் தாம் விட்டுவந்த பொருள்களை மீட்டுவர ஒழுங்கு செய்து தருமாறு கோரி இருந்தனர்.

இதனையடுத்து டக்ளஸ் தேவானந்தா படை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சை அடுத்து பொருள்களை மீட்டுவர இணக்கம் காணப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை, அரியாலை ஆகிய இடங்களில் இருந்து இடப்பெயர்வின் போது விட்டுவந்த பொருள்களை மீட்டு வருவதற்குப் பெயர் விவரங்களை இதுவரை சமர்ப்பித்தோரும் மற்றும் விட்டுவந்த பொருள்களை மீட்டுவர இதுவரை பெயர் சமர்ப்பிக்காதோரும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் ஒன்று கூடுமாறு கோரப்பட்டுள்ளது (இ-3)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா குணரத்தினம் (B.Sc, Dip. inEd.)

(யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி விஞ்ஞான ஆசிரியர், யா/ இடைக்காடு மகாவித்தியாலயம், யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி. யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் அதிபர்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், நவிண்டிலை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குணரத்தினம் அவர்கள் நேற்று (2000-09-13) புதன்கிழமை லண்டனில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பார்வதியின் அருமை மகனும் காலஞ்சென்ற முருகேசு - பார்வதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் நிராஞ்சினி(லண்டன்), நேரு (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. நவநீதராசா (M.B.B.S MRWG London), வசந்தா (கனடா) ஆகியோரின் மாமனாரும் நிஷாந் (லண்டன்). நவீனா (லண்டன்) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற கணேசலிங்கம் (பொறியியலாளர்), காலஞ்சென்ற சண்முகலிங்கம் (யாழ். மாவட்ட நீதிபதி), காலஞ்சென்ற யோகலிங்கம் (மரண விசாரணை அதிகாரி, கிளிநொச்சி), திருமதி விக்கினேஸ்வரி கனகசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
க. கனகசிங்கம்
(சகோதரன்)

சரணவாய் மத்தி,
கரவெட்டி.

(78377)

### ஜோசப் அப்புத்துரை

நல்லூர் நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் அப்புத்துரை நேற்று (13—09—2000) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் தம்பதிகளின் அன்பு மகனும் அரசமணியின் அன்புக்கணவரும் மகேந்திரன் (U. K.), நேமிநாதன் (U. K.), ஜெயபாபு (U. K.), சுகுணதாசன் (U. K.), சுகிர்ததாசன் (U. K.), திருமகள் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான கபிரியேல், தம்பித்துரை, செவக்கொழுந்து, பரிமளம், ஆசை மற்றும் குணமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பரராஜசேகரத்தின் (உரிமையாளர், சேகர் சவுண்ட் அன்ட் மியூசிக்) மைத்துனரும் பவளரதத்தின் ஒன்றுவிட்ட சகோதரரும் சத்தியபாமா (U. K.), அன்னலக்சுமி (U. K.), மாலினி (U. K.) மற்றும் பார்த்தீபன், குமணதீபன், அபிராமி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிக்கலஸ், நிமலன் (U. K.), மெலிண்டா (U. K.), ரபித்தா (U. K.), தஜீதன் (U. K.), சங்கீதன் (U. K) மற்றும் றோமியா, தர்மீகன், பாரணிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நல்லூர் புனி. யாக்கோப்பு சேமக்காலையில் பி. ப. 2.00 மணிக்கு இடம்பெறும்.

தகவல்:
ப. குமணன் (மருமகன்)
(சேகர்சவுண்ட் அன்ட் மியுசிக் நல்லூர்)

தற்போதைய முகவரி:-
கற்கோணிமடு,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(78373)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தற்போது பாவனையிலுள்ள A.80 Suzuki மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: M. விஜயகுமார் இல. 50/6, செட்டித்தெரு, நல்லூர். (78360)

### தவறிவிட்டது

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த தம்பிராசா கௌசியா என்பவருடைய வி.அ. அட்டை (இல.091043725) 20 ஆம் திகதி நல்லூரில் இருந்துவரும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஐங்கரன் புடைவையகம், கோண்டாவில் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (78361)

கடந்த 10-09-2000 (ஞாயிற்றுக் கிழமை) காலை கோப்பாய்க்கும் கொக்குவிலுக்கும் இடையில் தங்கச்செயின் பென்ரனுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சுகன்யாநகை அகம், சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (78354)

### தேவை

தொலைத்தொடர்பு சேவை நிலையத்தில் பணி புரிய பெண் தொலைபேசி இயக்குநர் தேவை.

நாளை (15.09. 2000) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்குப்பின் நேரில் வரவும்.

\- நிர்வாகி

162, ஆடியபாதம் வீதி,
கொக்குவில். (78366)

## பொதுசன மாதாந்த உதவிப்பணம்

யாழ்ப்பாணம், செப்.14

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கு செப்ரெம்பர் மாதத்துக்கான உதவிப்பணம் நெடுந்தீவு தபாலகத்திலும் ஏனைய இரு உப தபாலகங்களிலும் இன்று வியாழக் கிழமை முதல் வழங்கப்படவுள்ளது. இதனைப் பெறுவோர் காலதாமதமின்றிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-ரி)

★ ★ ★

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிப்போரில் திருநெல்வேலிச் சந்தி உபதபாலகம் மூலம் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான ஓகஸ்ட் மாத உதவிப்பணம் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்படுகிறது.

மேற்படி கொடுப்பனவுகளைக் காலதாமதமின்றிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## ஆசிரியர்.......

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்வும் வழங்குவது இருபதாம் நூற்றாண்டின் நிறைவில் இலங்கையில் நிகழும் அதி அற்புதம் என்று தான் கொள்ள வேண்டும் - எனக் கூறினார் மூத்த ஆசிரியர் ஒருவர்.

மூத்த சட்டத்தரணி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்-

இலங்கை சுதந்திரம் அடைந்த காலப்பகுதியில் இருந்து சட்டத்துறையில் பணியாற்றிவரும் நான் வயதை அடிப்படையாக வைத்து பதவி உயர்வு வழங்கப்படும் நடைமுறையைக் கண்டதில்லை. அதுவும் கல்விச் சேவையில் ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கு இந்தகைய நடைமுறையைப் பின்பற்றுவது பலத்த பின்விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தும். இது அடிப்படை மனித உரிமைமீறல் என்ற வகையில் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கக் கூடியது - எனக் கூறினார்.

ஆசிரியர்களில் ஒரு பகுதியினரை பெரும் பாதிப்புக்குள்ளாக்கியிருக்கும் இந்த விடயம் தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கூட்டாகப் போராடாமலும் அரசியல் தலைவர்கள் கவனம் செலுத்தாமலும் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பது ஆசிரியர்களை மேலும் கவலை கொள்ளச்செய்துள்ளது. *

## ஒன்றரை அடி நீளமான வாக்குச் சீட்டுகள்

இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே முதன்முறையாக மிக நீளமான வாக்குச்சீட்டுகள் இம்முறை அச்சிடப்பட்டுள்ளன.

கொழும்பு, திருகோணமலை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகள் இவ்வாறு ஒன்றரை அடி நீளமாக அச்சிடப்பட்டிருப்பதாக அரசாங்க அச்சகத் தலைவர் நெவில் நாணயக்கார தெரிவித்தார்.

இதுவரை 8 மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளதாகவும், அவை நேற்று புதன்கிழமை தொடக்கம் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. சுமார் ஒருகோடியே 30 லட்சம் வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதற்கென இங்கிலாந்தில் இருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட சீட்டுகளில் அவை அச்சிடப்படுகின்றன. இம்முறை அதிக கட்சிகள் போட்டியிடுவதால் வாக்குச்சீட்டுகள் பெரிதாக உள்ளன. அதனால் அவற்றை அச்சிடுவதும் கஷ்டமாக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9-6)

## அளவெட்டி
## கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
### புனர்நிர்மாணத் திருப்பணி

மேற்படி திருப்பணி நாளை (15.09.2000) வெள்ளிக் கிழமை அதிகாலை 6.00 மணியளவில் ஆரம்பமாக இருப்பதால் அடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(78368) திருப்பணிச்சபை

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடி 13 - 02 - 1981



நோயின் பிடி 15 - 08 - 2000

### துரைராசா ராஜ்குமார்

மெல்ல விரித்த புன்னகை
மேலான அன்பின் இன்மொழி
கூடி நீயும் எம்முடன்
குலவி வந்த வேளையில்
அள்ளிச் சென்றான் கொடுங்கோலன்
அந்தோ! தவிக்கிறோம் நாங்களடா!

உனை மறவா
நண்பர்கள்.

மனோகரா,
அல்வாய். (78330)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 10 - 10 - 1951



விண்ணில் 14 - 09 - 1999

### அ. ஞானசப்பிள்ளை (செல்வநாயகம்)

(சிறோர் பாதுகாப்பு உத்தியோகத்தர்)

அன்பாலும் பண்பாலும் அரவணைத்த அப்பா!
உங்கள் பிரிவால் என்றும் வாடுகின்றோம் அப்பா!
ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் கொண்டீர்களே?
உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டு அகலாது!

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (14-09-2000) வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆனையூர் புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

'செல்லிஸ்'
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (78368)

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் இந்து இளைஞர் மன்றத் தலைவர்
தி. தியாகச்சந்திரன் அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி தேவகி தியாகராசா**

அவர்கள் 11-09-2000 அன்று இறைவனடி சேர்ந்தமையை இட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உடுவில் இந்து இளைஞர் மன்றம்,
பாலர் பாடசாலை,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

உடுவில் மேற்கு. (C/12924)

## நீங்காத நினைவலையில் ஈராண்டு

மலர்வு 30 - 05 - 1928



உதிர்வு 07 - 08 - 1998

### அமரர் மு. இராஜேந்திரம்

எங்கள் குடும்பத்து வல்ல நற்தலைவராய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தே,
பங்கமேதும் வராது இப்பாரிலெமைப்
பக்குவமாய் வளர்த்தெடுத்த அப்பாவே!
மங்காப் புகழுடனே மறைந்து விட்ட
உங்களது நீங்கா நினைவலையில் நாம் மிதந்து
ஈராண்டுப் பூர்த்தியில் உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை இறைஞ்சுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பு மனைவி தங்கம்மா,
பிள்ளைகள்,
மருமக்கள், மற்றும்
பேரப்பிள்ளைகள்.

"நிலா - தாரகை"
ஆலங்கட்டை,
அல்வாய் வடக்கு,
அல்வாய். (78350)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அல்வாய் மண்ணில் உதயம் 13 - 02 - 1981



இந்திய மண்ணில் சங்கமம் 15 - 08 - 2000

### செல்வன் துரைராசா ராஜ்குமார்

(ராசுப்பழம்)

எங்கள் அன்பு ராசுப்பழமே எங்களையெல்லாம்
மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு
இன்று நீ இந்தியாவில் மீளாத்துயில் கொள்கின்றாயே!
அருமைச் செல்வமாகப் பிறந்து உன் மூன்று வயதில்
தந்தையை இழந்து
உன் அம்மாவின் அரவணைப்புக்குள் கிடந்தாய்
படிக்கப் போய் வீடு திரும்பப் பிந்தினால்,
உன் அம்மா படும்பாடு அறிவாயே!
உன் மைத்துனன், மைத்துனிமார், உறவினர்கள்,
நண்பர்கள்
கதறியழும் அழுகைச் சத்தத்திற்கேனும்
செவிசாய்க்காயோ?
இன்று எம் எல்லோரையும் கதறியழ விட்டு
இறைபதம் தேடிச் சென்றதேனோ?

இன்று (14-09-2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாயார்:
**துரைராசா இரத்தினகுமாரி**

மாமனார்:
**ந.நவரத்தினராசா குடும்பத்தினர்**

பொன்முருகன் இல்லம்,
மனோகரா,
அல்வாய். (78358)

# அதிரடி அரங்கு

கடந்த மாதம் 20 ஆம் திகதி உதயனில் வெளியான அதிரடி அரங்கில் யாழ். மத்திய கல்லூரியில் 18,19 ஆம் திகதிகளில் இடம்பெற்ற வடக்கு - கிழக்கு மாகாண சபையின் இடம்பெயர் சேவையினால் அங்கு இடம்பெற்ற ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை குழப்பமடைந்தது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

அதற்கு யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை மறுப்புக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கின்றார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த 17-08-2000 வியாழக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரால் தொலைபேசி மூலம் எமது கல்லூரியில் மக்கள் குறைகேள் செயலமர்வை நடத்தச் சம்மதம் கோரப்பட்டது.

கல்லூரியின் தென்கிழக்குப் பக்கமாகவுள்ள 'ஜேம்ஸ் விஞ்' மண்டபம் ஒதுக்கமாக உள்ளதாலும், அதற்கு அண்மையில் தென் பகுதியால் உள்வரும் பாதையும் உள்ளதால் அம்மண்டபமும் - மைதானப் பக்கமாக உள்ள அலுவலக கீழ்மாடியும் - கல்விப் பகுதிக்கு தம்பர் மண்டப மூன்றாம் மாடியும் - இதற்காக ஒதுக்கப்பட்டன.

150ஆவது நினைவு மண்டப மேல்மாடியும் அலுவலக மூன்று மாடிக் கட்டடத்தின் 2ஆம் மாடியும், சிமித் மண்டப கீழ்மாடியும் பரீட்சை மண்டபங்களாக இயங்கின. மக்கள் தென்பகுதி நுழைவாயிலாலும், அதிகாரிகள் மைதானப்பக்க அலுவலக நுழைவாயிலாலும் உள்நுழைய ஒழுங்கு செய்யப்பட்டது. மாணவர்கள் மைதானப்பக்க தென்பகுதி நுழைவாயிலால் நுழைய ஒழுங்கு செய்யப்பட்டது.

அரச அதிபர், கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இவற்றைப் பார்வையிட்டு மிகத் திருப்தி தெரிவித்தனர்.

உண்மையில் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் தவிர்ந்த வேறு பத்திரிகையாளரில் ஒரு சிலரே அங்குமிங்குமாக திரிந்துகொண்டனர். மக்களின் நடமாட்டம் பரீட்சை மண்டபப் பக்கமாக இருக்கக் கூடாது என்பதற்காக எமது ஊழியர்கள் அவ்வவ்விடங்களில் நிறுத்தப்பட்டு மக்களை அமைதியாகச் செல்ல ஒழுங்கு செய்யப்பட்டது. ஒலிபெருக்கி பாவிக்க முற்றாக அனுமதிக்கப்படவில்லை.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் சீருடையின்றி வந்தபோதே பொலீஸாரால் சோதனையிடப்பட்டனர். சீருடையுடன் வந்த மாணவர்கள் சோதனையிடப்படக்கூடாதென ஏற்கனவே பொலீஸாரிடம் அறிவுறுத்தப்பட்டது. இத்துடன் பரீட்சை முடிவடையும் முழு நேரமும் நான் பரீட்சை மண்டபங்கள் பாதிக்கப்படாதிருக்க, வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொண்டிருந்தேன்.

உண்மையில் மாணவர்கள் பாதிக்கப்படவோ பரீட்சை குழப்பமடையவோ எவ்வித நியாயமுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது மாணவர்கள், சிறப்பாக எனது கல்லூரி மாணவர்கள் பரீட்சையில் பாதிக்கப்படாதிருக்க வேண்டும் என்பதில் மிகக் கவனமாகச் செயற்பட்டேன்.

பரீட்சை மேற்பார்வையாளர்களுடன் நான் இணைந்து போதிய ஏற்பாடுகளைச் செய்தமையும், அவர்கள் இவ் விடயத்தில் எனக்கு முழு ஒத்துழைப்பு அளித்ததனையும் மிக்க நன்றியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மறுப்புக் குறித்து பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

1. மேற்படிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் இடம்பெயர் சேவையினால் பாதிக்கப்பட்டனர் என்பதே கல்வியியலாளர்கள் பலரினதும் பெற்றோர்களினதும் நமதும் கருத்தாகும்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அரச அதிபர், கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் போன்றோர் மாற்றுக் கருத்துத் தெரிவிக்கமாட்டார்கள் என்ற முழு நம்பிக்கையில் அவர்களின் பெயரையும் 'வேலிக்கு ஓணான் சாட்சி' என்ற கணக்கில் சாட்சிக்கு இழுத்திருக்கிறார் மத்திய கல்லூரி அதிபர் என்பதே நமது எண்ணம்.

2. இந்த மறுப்புக் கடிதம் கிடைத்தும் அதைப் பிரசுரிப்பதில் சில நாள்கள் நாம் தாமதம் காட்டியுள்ளோம்.

தமக்கிருந்த அழுத்தங்கள் காரணமாகவே இத்தகைய மறுப்பை எழுதவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டாரா என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. அழுத்தத்தின் மீதுதான் இத்தகைய மறுப்பு வரையப்பட்டதாக இருந்தால் அதைப் பிரசுரித்து, ஏன் அவரை வீண் சிக்கலில் மாட்டவைக்க வேண்டும் என்ற கருத்தும் இதற்குக் காரணம்.

ஆனால் அவரது பதவி நிலைக்கு அப்பால் அவர் எடுத்திருக்கும் நிலைப்பாடே அவரை இப்படி மறுப்பெழுத வைத்திருக்கின்றது என்பதை நாம் உறுதிப்படுத்தியதை அடுத்து அதனை அப்படியே பிரசுரித்துள்ளோம்.

3. எனினும், இதே விடயமாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கமும் 26ஆம் திகதி ஓர் அறிக்கையை அனுப்பிவைத்திருந்தார்.

உண்மை நிலையை வாசகர்கள் அறிந்துகொள்வதற்காகவும், அரசியல் அணிகளுக்கு பயப்படாமல் கல்விப் பாதிப்புகள் குறித்து குரல் எழுப்பும் பிரமுகர்கள் இன்னமும் நம் மத்தியில் இருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தவும் அந்த அறிக்கையையும் இங்கு பிரசுரிக்கின்றோம்.

கடந்த 20-08-2000ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையின் அதிரடி அரங்கில் வெளிவந்த - யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற, மக்கள் குறைகள் தீர்க்கும் இடப்பெயர்வு சேவையின்போது அப்பாடசாலையில் மூன்று மண்டபங்களில் நடைபெற்றுக்கொண்டிருந்த ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் எவ்வித குழப்பமும் இல்லாமல் பாடங்களுக்குத் தோற்றினார்களா? - என்ற விடயம் குறித்து - மாணவர்கள் மீதும் அக்கறை கொண்ட ஆசிரிய தொழிற் சங்கம் என்ற வகையில் இதுபற்றிக் கவனம் எடுக்கவேண்டியது எமது பொறுப்பாகும்.

அந்த இரண்டு நாள்களும் மிக முக்கிய பாடங்களான தமிழ், இரசாயனவியல் பரீட்சைகள் நடைபெற்றன.

இவ்விடயம் தொடர்பாக நான் மூன்று பரீட்சை மண்டபங்களிலும் மேற்பார்வையாளர்களாகக் கடமை புரிந்தவர்களை நேரில் தனித்தனியே சந்தித்து அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டபோது, மாணவர்களுக்கு உள்ளார்ந்த ரீதியாக பாதிப்பு ஏற்பட்டு, பரீட்சை எழுதுவதற்குக் கஷ்டப்பட்டார்கள் என்பதை அவர்கள் உறுதி செய்தார்கள். மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்காக பல முயற்சிகளில் ஈடுபட்டதாக அவர்கள் தெரிவித்தனர். அவர்களின் கூற்றில் இருந்து மாணவர்கள் பாதிப்படைந்துள்ளார்கள் என்பது முற்றுமுழுதான உண்மையாகும்.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட யாழ். அரச அதிபர், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயப் பணிப்பாளர், மத்திய கல்லூரி அதிபர் ஆகியோருக்கு மாணவர்கள் விடயத்தில் அக்கறை இருந்திருக்குமானால் - அவர்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் பரீட்சை என்பதை சிந்தித்திருப்பார்களாக இருந்தால் - இத்தவறு ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. இனிமேலாவது ஒரு சிலரின் நன்மைக்கு ஒத்துழைத்து மற்றவர்களின் வாழ்க்கையைச் சீர்குலைக்கும் வகையில் அவர்கள் செயற்படாமல் இருப்பார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இனி முடிவு வாசகர்களைப் பொறுத்தது.

– மின்னல்

# செய்திச்சாரம்

## தொழில்நுட்ப கல்லூரி பரீட்சைகள்

இலங்கைத தொழில்நுட்பக் கல்லூரிகளின் இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பகல்நேர, மாலைநேர பயிற்சிகளின் இறுதி ஆண்டு மாணவர்களையும் முன்னர் நூனசித்தி பெற்ற மாணவர்களையும் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப்படிவங்களை யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் ஒப்படைக்குமாறு கல்லூரி அதிபர் சு.செந்தில்நாதன் கேட்டுள்ளார். (ஐ-ரி)

## மீன்பிடிக்க அனுமதி

யாழ். குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு மீண்டும் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் படையினரால் மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குருநகர்ப் பகுதியில் இருந்து மீன்பிடித் தொழில்புரிவோர் பெரும் எண்ணிக்கையில் வெளியேறி வேறு இடங்களில் வாழ்வதனால் அன்றைய தினம் குருநகரில் இருந்து ஒரு சிலரே கடலுக்குச் சென்றதாக மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ-51)

## தனிநடிப்புப் போட்டி

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஏற்பாட்டில் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை நாடக வளர்ச்சி நிதி ஆதரவில் தனி நடிப்புப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பங்களை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பதாக போட்டி அமைப்பாளருக்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## பாடசாலை இடமாற்றம்

யாழ். சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஆனைக்கோட்டைக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

உயரப்புலம் மெ.மி.த.க பாடசாலையில் மாலைநேரப் பாடசாலையாக இது இயங்கி வருகிறது. (ஐ)


உ

## திருமண வாழ்த்து

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீவிக்கிரம வருஷம் ஆவணி 30 ஆம் நாள் நாளை (15-09-2000)
வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.24 - 1.20 (பழைய நேரம்) மணி வரையுள்ள
சுபமுகூர்த்த வேளையில்

திருநிறை செல்வன்
**செல்வராஜா ரமேஷ்** J.P
B.A., (ECON.) Hons, Cert. (Coun) AHC
[ Development Assistant - Manipay Pradeshiya Shaba, - Visiting Lect. (Psy.) UJF.]

Wedding

திருநிறை செல்வி
**இராசையா சுதா** B.Sc., (UJF)
(Teacher, Thondaimanaru Veerakathipillai Mahavidyalayam)

இறைவன் திருவருளால் நாவலடி ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் மணமகளின்
இல்லத்தில் திருமணம் நடைபெறவுள்ளதை ஆசீர்வதித்து
மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**NEW JEEVA AGENCY**
(ஜீவா திருமண சேவை)

சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.

(C/12923)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சங்குவேலி தெற்கு,
மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
மானிப்பாய் மேற்கு, கட்டுடையை
வசிப்பிடமாகக் கொண்டவருமான

**திரு. இராசேந்திரம் லோகேந்திரராஜா**

**அவர்கள்** அகில இலங்கை சமாதான நீதவானாக
நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.
இவர் கடந்த வாரம் மல்லாகம் நீதிமன்றில்
நீதிபதி திரு. B.சுப்பிரமணியம்
அவர்களின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஓய்வுபெற்ற உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டரும், யா/ சங்குவேலி அரசினர் த.க.பாடசாலை, மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும், சங்குவேலி தெற்கு இளைஞர் விவசாய கழகம், இந்து வாலிபர் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் செயலாளரும், மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சங்க உறுப்பினரும், மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக் கிளை 2இன் தலைவருமாவார்.

இவரது சமூகத் தொண்டு மென்மேலும் வளர
பாராட்டி வாழ்த்துபவர்கள்

சுந்தர்சன்
ஸ்தாபனத்தினரும்,
ஊழியர்களும்.

மத்திய சந்தை முன்பாக,
மானிப்பாய்.

(C/12929)



சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவுடன்
சமாதானம், சமத்துவம், வடக்கு – கிழக்கு இணைந்த
ஜனநாயகக் கூட்டாட்சியில் துரித அபிவிருத்தியை அடைந்திட

**வேல்முருகு தங்கராசா**
தலைமையில் போட்டியிடும்

**சுயேச்சைக்குழு இலக்கம் (03)**

ரெலிபோன்
TELEPHONE

X

(78212)

## ஜனநாயக மரபுகளை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதற்கென அரசு முன்வைத்த தீர்வு யோசனைகளில் இருக்கும் முரண்பாடுகளைப் பேச்சுவார்த்தை மூலம் களைய முடியும் என்று நம்புவதாகவும், எதிர்காலத்தில் முன்வைக்கப்படும் தீர்வு யோசனைகள் இத்தகையதொரு கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையிலேயே வெற்றிபெற முடியும் என்றும் அவர் சொன்னார்.

•சிறுபான்மையினருக்கு அதிகளவு அதிகாரங்கள் இந்தத் தீர்வுத் திட்டத்தில் இருப்பதாகவும் மகா சங்கத்தினர் வாதிட்ட போதிலும் எந்தெந்த விடயங்களில் அதிகாரம் கூடுதலாக வழங்கப்பட்டது என்பதை அவர்கள் சுட்டிக்காட்டவில்லை; அதேபோல் இந்தத் தீர்வுத் திட்டத்தில் தமக்கு எதுவுமே இல்லை என்று கூறும் தமிழ்க் கட்சிகளும் அந்தக் குறைபாடுகளை எமக்குத் தெளிவுபடுத்தவில்லை எவ்வாறாயினும் தற்போது நாடாளுமன்றத்தின் முன்னாலோ, மக்களின் முன்னாலோ எந்தவொரு தீர்வுத்திட்டமும் இல்லை. அரசாங்கம் சமர்ப்பித்த அரசமைபபுச் சட்டமூலம் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதோடு செல்லுபடியற்றதாகிப் போனது.இனிமேல் எதிர்காலத்தில் ஒரு தீர்வு யோசனை முன்வைக்கப்பட்டாலோ அல்லது ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் மீண்டும் திருத்தப்படுவதாக இருந்தாலோ இவற்றை எதிர்த்தவர்கள் அதற்கான காரணங்களைப் பரஸ்பரம் விளக்கிப் பேச்சுமூலம் கருத்தொருமைப்பாட்டுக்கு வரவேண்டும் அவ்வாறாக முரண்பட்ட இரண்டு பிரதான தரப்புகளான மகாசங்கத்தினரும், தமிழ்க்கட்சிகளும் உடன்பாட்டுக்கு வந்தால் மாத்திரமே எந்தவொரு தீர்வு முயற்சியும் செயல்முறையில் சாத்தியப்படும்- என்றார். (அ-ஐ-3)

## நாடாளுமன்றைத்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடிக்கடி கூடி ஆராய்வதற்கு வசதியாக நாடாளுமன்றம் தொடர்ந்தும் கூட்டப்படவேண்டும் என்பது அவரது வாதமாக உள்ளது.

இதேவேளை -

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் தொடர்ந்தும் நடைபெற வசதி செய்யப்பட்டால் உறுப்பினர்கள் தமது வசதிகளைப் பயன்படுத்தி பிரசாரங்களை மேற்கொள்ள வாய்ப்பாகிவிடும் என்று வேறு சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ-20)

## ஷெல் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்: இரு சிப்பாய்கள் காயமடைந்தனர். (இ-3-21-8)

## கலைக்கப்பட்ட......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்றைய அமர்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு சகல முன்னாள் எம்.பிக்களையும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் கேட்டுள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தின் 155 ஆவது சரத்தின் கீழ் தமக்குள்ள அதிகாரத்தின் பிரகாரம் இலங்கை அடங்கிலும் பாதுகாப்புச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் பிரகடனத்தை ஜனாதிபதி இம்மாதம் 4 ஆம் திகதி வெளியிட்டிருந்தார்.

அந்தப் பிரகடனம் வெளியிடப்பட்ட பத்தாம் நாளன்று நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டும் என்று 155ஆவது சரத்தின் 4ஆவது பிரிவின் 1ஆவது உறுப்புரையில் விதிக்கப்பட்டிருக்கிறது.

அதற்கு அமைவாகவே செயலாளர் நாயகம் இன்றையதினம் நாடாளுமன்றத்தைக் கூட்டியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி ஒக்ரோபர் பத்தாம் திகதிவரை செல்லுபடியாவதற்கு வகை செய்யப்படும் என்றும் -

அந்த நாள்வரை அவர்களுக்குச் சம்பளம் கிடைக்க வகை செய்யப்படும் என்றும் - நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது. அதற்கேற்றவாறே ஜனாதிபதியின் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் பிரகடனம் அமைந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (அ-3-20)

## யாழ். மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யுத்தம் காரணமாக மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், அவர்களின் இடம்பெயர்வுகள் போன்ற விவரங்களை இந்தியத் தூதுவர் உன்னிப்பாகக் கேட்டறிந்ததாக சித்தார்த்தன் தெரிவித்தார். -

இந்திய மீனவர்கள் அத்துமீறி பேசாலைக் கடற்பகுதிக்குள் ஊடுருவி மீன்பிடித் தொழில் மேற்கொள்வதால் அந்தப் பகுதி மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று சித்தார்த்தன் கோரினார்.


(78203)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் சின்னம்!!



தாயவள் முகத்தில் புன்னகை பூப்பூக்க
தந்தையர் தலை நிமிர்த்தி நடை நடக்க
தாயக மண்ணிலே விரும்பிடும் தன்னாட்சி
தந்திட உழைப்பதே என்றும் நம் பணி!

(ஈ.பி.டி.பி.)

யாழ். மாவட்டத்தில் நீர்ப்பாசன அபிவிருத்திக்கு ஈ.பி.டி.பி.யின் ஏற்பாட்டினால் வடக்கிற்கான மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகார சபையின் நிதியில் இருந்து 3 கோடியே 20 லட்சம் ரூபா செலவில் திட்டங்கள் இவ்வாண்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.



**BRIGHTMAN**
கல்வி நிலையம்
(நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)
பிறவுண் றோட் - யாழ்.நகர்

**சிங்களம்**
By.லீலா கிருஸ்ணன்
ஆரம்பம்: 16.09.2000
Sat, Sun 8.30 (78344)



**BEACON**
வெலிங்டன் சந்தி அருகில்
**A/L 2001**
பொருளியல்
திரு.P.மோகன்
சர்வதேச பொருளியல்
Sat, Sun 10 - 11
**PAPER CLASS**
Wed, Fri 4.30 - 5.30
ஆரம்பம்: 15.09.2k 4.30 p.m
(78374)



## மரண அறிவித்தல்

### திருமதி இராசரத்தினம் மகேஸ்வரி

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் மகேஸ்வரி அவர்கள் நேற்று (13.09.2000) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும் அன்னம்மா, சின்னத்துரை ஆகியோரின் அன்புச சகோதரியும், நாகராணி, யோகராணி, சிவபாலசுப்பிரமணியம் (பாப்பா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசதுரை, சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவீந்திரன், சசீந்திரன், இராஜேஸ்வரன், ரதிவதனி, யோகவதனி, தர்மசீலன், மதிவதனி, பத்மசீலன், பாமா, குணசீலன், ஜெயசீலன், பிரதிமா, சுபாசினி, நிரோஷன், சேந்தன், மயூரிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2000) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.சிவபாலசுப்பிரமணியம், (மகன்)
(பாப்பா)
சிவா ஸ்ருடியோ, பண்டத்தரிப்பு.
T.P - 070 - 212574

*பிள்ளையார் கோயிலடி,*
*வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.*
(C/12930)



## அஞ்சலி

சங்கத்தின் தலைமைப் பரீட்சகரும்
மரபுவழித் தமிழ்க் கல்வியை வளர்த்த பெருமகனுமாகிய
மகாவித்துவான்
**இ.நமசிவாய தேசிகர்** அவர்களுக்கு
சங்கம் தன் அஞ்சலியைத் தெரிவிக்கின்றது.

ஆரிய திராவிட
பாஷாபிவிருத்திச்சங்கம்

*223, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(78372)





**ஸ்ரீ வல்லிபுரா போட்டோ**

* எதிர்வரும் 16.09.2000 கொழும்புக்கு படச்சுருள்கள் அனுப்பி வைக்கப்படும்.

புலோலி தெற்கு,
புலோலி.
T.P - 070 - 212720

545, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
T.P - 021-2604

(78334)



‘இன்னிசை உலா வரும் இன்ப இசைச் சோலை’

**விஜேய் றெக்கோடிங் சென்ரர்**

இன்று (14.09.2000) வியாழக்கிழமை நண்பகல் 10.52 - 11.22 மணிக்குள் வரும் சுபவேளையில் எமது கிளை நிறுவனத்தை பிரதான வீதி மானிப்பாயில் திறக்கவுள்ளோம்.

வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

539, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

பிரதான வீதி,
மானிப்பாய்.

(78376)



*உ*
*சிவமயம்*

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களகரமான விக்கிரம வருடம் ஆவணி மாதம் 30 ஆம் நாள் நாளை (15.09.2000) வெள்ளிக்கிழமை காலை 7.35 மணிமுதல் 9.15 மணிவரையுள்ள, உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும், துலாலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**விக்னேஸ்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**ஜெயசோதி**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி வை.குலரட்ணம்
273/11, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி த.மகேந்திரன்
செட்டியா மடம், அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

*இரு வீட்டார் அழைப்பு*
(C/12918)





த.சுபத்திரன்
(றொபேட்)

அமைதிக்கு உழைப்போம்
அதிகாரப் பகிர்வுக்குக் குரல் கொடுப்போம்
அனைவருக்கும் உதவுவோம்
தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்

சுயேச்சைக் குழு - 02



X



அ.வரதராஜப்பெருமாள்
(78213)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.09.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.